# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)



**இந்த இதழில்**

**மடுமாதாவின்மேற் கவிதைகள்**

மடுப்பதியில் கண்டேன் — நீ. மரியசேவியர்
அமல உற்பவி — 'பாக்கியம்'
மடுப்பதியின் எழில்தானென்னே!
— க. மரிசால்பிள்ளைப் புலவர்
அருள்வாய் தாயே! — யாழ். 'ஜெயம்'



95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 30-ம் இல.


## 2-ம் வத்திக்கான் சங்கமெனும் மாபெரும் பாடசாலை

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் கடந்த ஆடி மாதம் 17-ந் தேதி அளித்த பகிரங்க பேட்டியில் திருச்சபையின் சகல மக்களையும் 2-ம வத்திக்கான் சங்கமாகிய மா பெரும் பாடசாலைக்குத் திரும்பச் சென்று அங்கு பழையன வற்றையும் புதியனவற்றையும் கற்று 23-ம் அருளப்ப பாப்பரசர் கூறிய திருச்சபையின் முறையைப் புதுப்பிக்கும் வேலையில் ஈடுபடக் கேட்டுக் கொண்டார். வத்திக்கான்சங்கக்கூட்டங்களின் முடிவுடன் சங்கவேலைகள் முடிவடைய வில்லையெனவும், சங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வேலைகள் வளர்ந்துவருகின்றனவென்றும், திருச்சபையின் உள்ளும் புறத்தும் அவ்வேலைகள் நற்பயனைத் தருமெனவும் பரி. தந்தை கூறி திருச்சபையின் மக்களை சங்க பள்ளிக்கூடத்தில் படித்து, விசுவாசத்திலும் ஞானத்திலும் வளர்ந்துவரக் கேட்டுக் கொண்டார்.

## 10,000 மைல் திருயாத்திரை

தென்னமெரிக்காவிலே வெனெசுவேலா நாட்டின் கரையிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ளதும், வின்வாட்தீவுகளில் அடங்குவதுமான கிறெனடாவிலிருந்து சுமார் முப்பதின்மரைக் கொண்ட யாத்திரைக் கோஷ்டி ஒன்று தங்கள் மேற்றிராணியாரான பற்றிக் வெப்ஸ்ரூர் ஆண்டகை தலைமையில் லூர்துபதிக்கு யாத்திரைசெய்து திரும்பியிருக்கிறது. இவர்கள் யாத்திரைசெய்த தூரம் 10,000 மைலுக்கு மேலாகும். இந்த யாத்திரிகர்கள் லூர்துபதியிலிருந்து திரும்புகையில் றோமைநகர், லிஸ்பன், பத்திமா, அசிசி, பதுவை, வெனிஸ் முதலாம் முக்கியத்துவம் வாய்ந்த கத்தோலிக்க நகர்களைத் தரிசித்தார்கள். றோமைநகரிலே தங்கியிருந்த போது பாப்பரசரின்விசேஷ பேட்டியும் பெற்றுக்கொண்டார்கள். இந்த யாத்திரையாலே இவர்கள் பெரிதும் மனவருட்சியும், பக்தியருட்சியும் அடைந்தமையாலே அடுத்தவருடமும் இருமடங்கானோருடன் இந்த யாத்திரையைத் தொடர்ந்து நடத்துவதற்காக லண்டன் நகரிலுள்ள கத்தோலிக்கு பிரயாண சங்கத்துடன் ஒழுங்கு செய்து போயிருக்கிறார்கள்.

## குருவானவருக்கு எம். பி. ஈ. பட்டம்

மெக்சிக்கோ தேசத்தில் சென்ற 13 வருட காலமாக கல்வி, சமூகசேவை யாகிய துறைகளில் செய்து வந்த மதிப்புக்குரிய சேவைக்காக வணக்கத்துக்குரிய பற்றிக் திருனற் சுவாமியாருக்கு எலிசபெத் மகாராணியார் பக்கிங்காம் மாளிகையில் சென்றவாரம் எம். பி. ஈ. பட்டம் சூட்டினார்.

## மனித உரிமைகள் அரசாங்க தயவிலே தங்கவில்லை

பரி. தந்தை 6-வது சின்னப்பர் அண்மையில் தம்மைத் தரிசிக்கச் சென்ற அமெரிக்க நீதிவாதிமாரின் சங்கத்தின் குழுவினருக்குச் செய்த பேருரையில் அத்தேச நீதிமுறைகளில் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ள உரிமைகளைக் காப்பாற்றும் வழிவகைகள் அமைக்கப்பட் டிருப்பதைப் பாராட்டிப்பேசி மனிதஉரிமைகள் தேவனிலிருந்து கிடைக்கப் பட்டனவென்றும், அவ்வுரிமைகளை அரசாங்கங்கள் பாதுகாப்பதே அவர்களுடைய கடமையென்றும் எடுத்துக்கூறினார். இவ்வுரிமைகள் எந்த அரசாங்கத்தினாலும் தமது சலுகைக்காகக் கொடுக்கப்படுவதல்ல; ஆனால் தேவனால் கொடுக்கப்பட்ட உரிமைகளைக் காப்பாற்றுவதே அரசாங்கங்களின் கடமையாகும்.

## டக்றர் சலாசர் காலமானார்

போர்த்துக்கால் தேசத்துக்கு 36 வருட காலமாக பிரதமமந்திரியும், சர்வாதிகாரியுமாய் விளங்கிவந்த டக்றர் சலாசர் சென்ற ஆனிமாதம் 27-ம் தேதி தமது 81-ம் வயதில் காலமானார். 1928-ம் ஆண்டு கேவல நிலையிலிருந்த போர்த்துக்கால் தேச பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்த அக்காலத்தில் ஓர் பேராசிரியராயிருந்த டக்றர் சலாசர் அழைக்கப்பட்டு, நிதிமந்திரிபதவியை அடைந்தார். இரு வருடங்களுக்குள் நாடு கேவல நிலை நீங்கி வளர்ச்சியுறத் தொடங்கிற்று. 1932-ம் ஆண்டு பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டு, 1968-ம் ஆண்டுவரையும் சர்வாதிகாரத்துடன நாட்டை ஆண்டுவந்தார். சற்றுச் சர்வாதிகாரம் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்பது அவரது அபிப்பிராயம். சர்வாதிகாரியாய் இருந்த போதிலும் மறைந்த சீவியத்தையே அவர் விரும்பினார். பிரமச்சாரியும், உத்தம கத்தோலிக்கருமான இவர் நாள்தோறும் பூசை காண்பார். இருதய நோயினால் பீடிக்கப்பட்டு இரு வருடங்கள் பிரதமர் பதவியிலிருந்து நீங்கித் தனிமையான சீவியத்தை நடத்தி வந்தார்

## குருத்துவ மாணவருக்கு மகிமைப்பட்டம்

சமீபத்திலே பிரித்தானிய மகாராணியாரது பிறந்த பெருநாளின்போது பல்வேறு மகிமைப்பட்டங்கள் சன்மானிக்கப் பெற்றவர்களில் திரு. மோறிஸ் லீ அவர்களும் ஒருவர். இவருக்கு வயது 62. இவர் தாரமிழந்தவர். சென்றவருடம் தமது உத்தியோக பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறவரையில் லண்டன்நகரிலே பிரித்தானிய றெயில் பிரயாண மத்தியநிலையத்தின் மனேஜராய் இருந்துவந்தார். அன்று செவ்வாய்க்கிழமை இவர் தமக்குச்சன்மானிக்கப்பெற்ற எம். பி. ஈ. மகிமை வரிசைக்குரிய விருதை மகாராணியாரின் தாயாரிடமிருந்து பெற்றுத் திரும்பியபோது இவரை வரவேற்றவர்களில் இவருடைய மகன் டேவிட்டும், மகள் றோஸ் மேரியும் அடங்குவர். தற்போது இவர் றோமைநகரிலுள்ள பிடாகுருமடத்தில் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றார். அக்குருமட மாணவர்களில் ஒருவர் இவ்விதம் கௌரவிக்கப் பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

## ஐ. நா. ஸ்தாபன உணவு நிறுவனத்தில் பாப்பரசர் பேசுவார்

ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் நிறுவப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன இதன் உணவு விவசாயக் கிளை (F. A. O.) றோமாபுரியிலிருந்து தொண்டாற்றிவருகின்றது, இப்பிரிவின் மூலமாக கஷ்டப்படும் பல தேசங்கள் உதவி பெற்றிருக்கின்றன. இந்தச் சேவைக்கு நன்றியாகவும், மேலும் இத்தகைய சேவைக்கு ஊக்கமூட்டவும் பரி. தந்தை வருகிற கார்த்திகை மாதம் 16-ந் திகதி றோமாபுரிக் காரியாலயத்துக்கு விஜயம் செய்து சொற்பொழிவு ஆற்ற ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றது.

## பாப்பரசரின் நன்றி

தாம் பாப்பரசராக முடிசூட்டப்பட்டு 6வருட முடிவு தினத்தன்று இலங்கை மக்கள் தம்மை நினைத்து மன்றாடி, மகிழ்ச்சி தெரிவித்ததற்காகப் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பர் இந்நாட்டு மக்களுக்கு இலங்கைக் கருதினால் கூறே அடிகளார் மூலம் நன்றி தெரிவித்திருக்கின்றார். இச்செய்தி கிடைப்பதற்குச் சில தினங்களுக்கு முன் பரிசுத்ததந்தையின் குருத்துவ வெள்ளிவிழாவின்போது இலங்கைக் கத்தோலிக்கமக்கள் தமக்கு அனுப்பிய ஞானப்பூச்செண்டுக்காகவும், நல்வாழ்த்துக்காகவும் தனது அரசாங்க காரியதரிசி கருதினால்மூலம் தமது நன்றியை நமது கருதினாலுக்கு அனுப்பியிருந்தார்.

## குரவரின் மகத்தான சேவை

பரீஸ் நகரிலுள்ள பெயர் பெற்ற நோட்றேடாம் ஆசனக் கோவில் சங்கிறிஸ்தையின் பொறுப்பாளியாயிருந்து நாற்பது ஆண்டுகளாக அதனைப் பரிபாலித்துவந்தவர். றோகர் கோர்டன் சுவாமியார் தம் பதவியிலிருந்து இளைப்பாறியிருக்கின்றார். இத்தனை ஆண்டுகளிலும் அவர் 33 மேற்றிராணிமார்களின் அபிஷேகத்துக்கெனத் திருவஸ்திரங்களைச் சித்தஞ்செய்திருக்கிறார். எத்தனையோ அரசர்களையும், அரசிகளையும், பிரான்சிய ஜனாதிபதி தெகோல் அவர்களைத்தானும் அங்கு வரவேற்றிருக்கின்றார். இவர்களையெல்லாம் அவர் நோட் றேடாம் ஆலயத்தில் பார்த்திருக்கின்றார். இவருக்கு எப்போதும் அதிகம் உவப்பான சேவையாய் இருந்துவந்தது பிரேதசேம திருச்சடங்குச் சேவையே. பரீஸ்நகர் முன்னாள் அதிமேற்றிராணியாரான கருதினால் சூகாட் ஆண்டகையின் திருமேனி அடக்கமானது அவருக்கு என்றுமில்லா மனப்பதிவை உண்டுபண்ணியது. ஏனெனில், அதற்கு 150 கருதினால்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் சமுகமளித்திருந்தார்கள்.

## சுய ஆட்சிக்கு மேற்றிராணிமாரின் ஆதரவு

பப்புவா, நியூகினியா தேசங்களுக்குச் சுய ஆட்சி அளிக்கப்பட வேண்டுமென்று அப்பிரதேச மேற்றிராணிமார் வாதாடி வருகின்றனர். அத்தேசங்கள் சுய ஆட்சி அடைவதற்குப் பருவமாகி விட்டனவெனவும், ஒரு தேசத்தின் உன்னத நோக்கங்களுட் சிறந்தது தன்னைத்தான் நடத்திக் கொள்ள வேண்டுமென்ற விருப்பமுமே எனவும் அவர்கள் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமான தேர்தல்

யேசு இரட்சகர் மார்த்தாவின் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கப்பட்டார் அங்கு அவர் மற்றைய விருந்தினரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அப்போது மரியாளும் அருகில் அமைதியாக அமர்ந்து அவர் வார்த்தைகளைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தாள். மார்த்தாள் சமையல் வேலையிலே முற்றும் முயன்றுகொண்டிருந்தாள். விருந்தினரோ விசேஷமானவர். தங்கள் திரவியமான சகோதரன் லாசாரை சாவில் நின்று சிலநாட்களுக்குமுன் தானே உயிர்ப்பித்துத் தந்தார். அவருக்கு மரியாதையான போசனம் ஆக்கிப் படைக்க வேண்டாமா? அந்த வேலையில் உதவிசெய்ய வேண்டிய மரியாளோ கள்ளம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

விமரிசை நிறைந்த மார்த்தாள் விருந்தினர் முன்னே வந்தாள். "குருவே! எனது சகோதரியை வந்து சமையலுக்கு உதவிசெய்யும்படி கட்டளை பண்ணும்" என்று வேண்டினாள். மார்த்தாளின் செயல் சரியானதென்று நாம் எல்லோரும் ஏகமனமாக ஒத்துக்கொள்ளுவோம். விருந்தினரான குருவோடு சல்லாபிப்பது ஆண்மக்களுடைய அலுவலல்லவா? அதுவும்பூதரிடையே போசனம் தயாரிப்பதுதானே பெண்களுடைய பிரதானமான வேலை. அதைவிட்டு நவீன மோடியான விடுப்பு வனிதையர்போலக் கடமையைமறந்து கதையிலே காலம் கழிப்பது நமது நாட்டுப் பண்பாட்டுக்கே முரண்பாடு. எனவே, கிறீஸ்து மார்த்தாளின் மன்றாட்டை அனுவதித்து, "போ மரிமாள்; அக்காளுக்கு உதவி செய்" என்று கட்டளையிடுவாரென்றல்லவா எதிர்பார்ப்போம்.

ஆனால், நடந்ததோ முற்றும் மாறாக. யேசு மரியாளின் பக்கமாகவே குரலெழுப்பினார். "மார்த்தா, மார்த்தா நீ பல காரியங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால், ஒன்றுதான் அவசியம். மரியாள் திறமான பங்கைத் தேர்ந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுபடாது" என்றார். அங்கிருந்த விருந்தினரைப் போலதான் நாங்களும் அதிசயப்பட வேண்டியிருக்கிறது. மார்த்தாளுக்குக் கட்டாயம் கோபம் பொங்கியிருக்கும். ஆனால், குருவுக்கு மரியாதையாக மௌனமாய்ப் போய் இருப்பாள் அது மாத்திரமல்ல, மனச்சாட்சியுள்ள மரியாளும் பிழையை உணர்ந்து உடனே எழுந்து உதவிசெய்யப் போயிருப்பாள்.

எனினும், இரட்சகருடைய பேச்சு மார்த்தாளுக்கு மட்டுமல்ல நம் ஒவ்வொருவருக்குமே பாடம நமது வாழ்விலே பிரதானமான கருமமேதென்று கவனிக்கும்படி ஆண்டவர் எங்களைத் தூண்டுகின்றார் எங்களுடைய நாளாந்த சீவியம் அல்லோல கல்லோலப்படுவது ஆருமற்கதே. சரீர சம்ரட்சணைக்கு. உலக ஊழலுக்கு உழைப்பதிலே தான் எங்கள் முயற்சியெல்லாம் முடிகிறது. ஆத்துமத்தையோ, நித்தியத்தையோ நினைப்பதற்கு எங்களுக்கு நேரமில்லை. நவீன நாகரீக உலகிலே முன்னேற்ற போர்வைக்குள்ளே நாங்கள் பம்பரம்போலேதான் மின்வேகத்திலே சுழலுகிறோம். ஆறி அமர்ந்திருந்து வாசிக்க, யோசிக்க, யாசிக்க, நேசிக்க நமக்கில்லை நேரம். ஆண்டவர் வார்த்தையைக் கேட்க அவகாசமேது நமக்கு.

ஏன், நாமதற்குத்தானே தேவாலயம் வந்திருக்கின்றோம் என்பீர்கள். ஆனால், இங்கு என்ன செய்கிறோம். உலகிலேயுள்ள சப்தம் சந்தடியைத்தானே இங்கும் கூட்டிக் கட்டிக்கொண்டு வருகிறோம். எங்களுடைய முறைப்படும், விண்ணப்பமும், பிரார்த்தனையும், பாடம்பண்ணின செபமும்தான் ஒலிக்கிறது. வந்த நேரம்முதல் வாய் உளையுமட்டும் ஓதுகிறோம். அருகிலிருப்பவரின் காது புளிக்குமட்டும் அலட்டுகிறோம். ஆண்டவர் சொல்லுகிறதைக் கேட்க எங்களுக்குப் பழக்கமில்லை, விருப்பமில்லை, சற்றுநேரம் சப்தமில்லாமலிருக்கச் சொன்னாலோ கரையிலே பிடித்துப்போட்ட மீன்கள் போலத் துடிக்கிறோம்; பிள்ளைகளையாகுதல் நுள்ளிவிடுகிறோம் ஆரவாரம் அளிக்கச் சொல்லி. இந்த விபரீதப் போக்கை விட்டுப்போடச் சொல்லித்தான் ஆண்டவர் கட்டளை பண்ணுகிறார்.

இறைவன் எங்களோடு இதயத்திலே கதைக்கக் காத்துக் கொண்டிருக்கிறான். நாங்கள் சப்தம்போட்டு அலம்பிக் கொண்டிருந்தால் அவருடைய இரகசியவார்த்தை எங்களுடைய புத்தியிலே பதிவது எப்படி? அமைதி தேவை, கவனம் தேவை, கரிசனை தேவை. நினைவை உலகெல்லாம் உலாவவிடாமல் இறைவன் முன்நிறுத்த வேண்டும். குழப்பமுள்ள இடத்திலே இழப்பந்தானே. தேவன்வீட்டிலாகுதல்மௌனமாயிருந்து அவனோடு தியானசல்லாபஞ் செய்ய நாங்கள் முயற்சிஎடுக்க வேண்டும். அதோடு கிறிஸ்துவின் பேச்சு இன்றும் அவருடைய திருச்சபையிலே மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறது. அதையும் நாங்கள் கவனமாகக் கேட்கப் படிக்கப் பழகவேண்டும். கவலையீனமாகக் கடமைக்குக் கேட்பதிற் பயனில்லை. ஏன்? நாங்கள் சப்தம்சுவைக்கவும் காட்சி களிக்கவுமா கோவிலுக்கு வருகிறோம்.

இல்லையில்லை; இறைவன் வார்த்தையைக் கேட்க, அதை விளங்கி விரும்பி அதன் வழி நின்று வாழ, நித்திய வாழ்வை அடையும் வழியிலே சித்தியோடு சீவிக்க, அதற்குத்தான் கடவுளின் வார்த்தையான கிறிஸ்துவின் அடிஅருகிலே அமரவேண்டும். மரியாளைப்போலே அவர் வார்த்தைகளை, அமிர்த போதனைகளை அன்போடும், ஆவலோடும கேட்கவேண்டும். அதுதான் திறமான பங்கு. அழியாத ஆத்துமத்தின் வாழ்வுக்கு அவசியமானது. அதிலும் குறைவானதுதான் உடலின் தேவை உலகின் தேவை என்று காட்ட விரும்புகிறார் கிறிஸ்து. சோம்பலையோ, வினோதப் பிரியத்தையோ அவர் ஆதரிக்கவில்லையென்பது நிச்சயம்.

மார்த்தாள் மாதிரி நாமெல்லோரும் உலகிலே உடல் வருந்தி வேலைசெய்யத்தான் வேண்டும். அதன் மேலாக கடவுள் வார்த்தையைக் கேட்டு, அதை விளங்கி விரும்பி நமது நித்திய இலட்சியத்துக்காக வாழவேண்டும். இந்த அருளைத்தான் தரும்படி ஆண்டவனை இரந்து வேண்டுவோமாக!

## யூகோசிலாவியாவுடன் வத்திக்கானுக்கு பூரண சிநேகமா?

இரண்டொரு மாதங்களில் யூகோசிலாவியாவுடன் வத்திக்கான் பூரண அரசியல் சிநேக பான்மையில் உயர் அரசியல் தூதர்களை நியமிக்க ஏற்பாடுகள் ஆகிவிட்டன என வதந்திகள் கூறுகின்றன. 18 வருடங்களின் முன் துண்டிக்கப்பட்டிருந்த சிநேக பந்தனம் 4 வருடங்களுக்குமுன் ஓரளவு திருந்திய நிலை எய்தி இருசாராரும் தூதுவர்களை நியமித்துக் கொண்டனர். அதன்பின் ஜனாதிபதி ரீற்றோவுடன் வத்திக்கானின் உறவு திருந்திக் கொண்டே வந்துள்ளது. அண்மையில் ஜனாதிபதி ரோமாபுரிக்கு விஜயம் செய்தபொழுது பரிசுத்த தந்தையைத் தரிசித்துமிருக்கிறார். ஆகவே, இப்போது இவ்வுறவு மேலும் திருத்தமடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. யூகோசிலாவியா ஓர் வகை சோஷலிச நாடாயிருப்பதால் அதன் முன்மாதிரியைப்பிற சோஷலிச நாடுகளும் பின்பற்றி வருமாயின் வருங்காலத்துக்கு இது நல்ல அறிகுறியாகும்.

## வால்ஷ் அடிகளார் ஒரு கருதினாலா?

இருமாதங்களின்முன் சீனா தேசத்திலே மறியலிலிருந்து விடுதலையான வால்ஷ் அடிகளார் இப்போது ஹொங்கொங்தீவில் வைத்தியசாலை ஒன்றில் அவருக்குள்ள பல சுகயீனங்களுக்காகப் பராமரிப்புப்பெற்று வருகிறார். விரைவில் வத்திக்கான் செல்வாரென்று வதந்திகள் கூறுகின்றன. வால்ஷ் அடிகளார் ஒரு மேற்றிராணியார் மாத்திரமல்ல, அவர் ஒரு கருதினாலாயுமிருக்கிறார் எனச் சிலர் கூறுகின்றார்கள். 1959ஆம் ஆண்டில் பரிசுத்த தந்தை நியமித்த கருதினால்மாரில் இவரும்ஒருவரென்றும், அவர் பொதுவுடைமைக் காரரின் கையில் மறியலிலிருந்ததால் அவர் பெயரைப் பகிரங்கப் படுத்துதல் அவருக்குப் பல இடையூறுகள் விளைவித்திருக்குமாதலால் இவரது பெயரைப் பாப்பரசர் பகிரங்கமாகக் கருதினால் பட்டத்தினருடன் கூறவில்லை எனக கூறப்படுகின்றது. இது உண்மையானால் இவர் வத்திக்கான் சென்றதும், கருதினாலாகும் சடங்குகள் நிறைவேறலாம்.

# நன்றித் திருயாத்திரை

இங்கிலாந்திலே மான்செஸ்றர்நகர் நெசவுதொழிலில் உலகப் பிரசித்திபெற்றது. அங்குள்ள ஒரு நெசவுதொழில் ஸ்தாபனத்தின் தலைவரான திரு. எட்வாட் அன்ஸ்போர்த் அவர்கள் இற்றைக்கு 37 ஆண்டுகளின்முன் ரோமைநகருக்கு முதலாவது திருயாத்திரைசெய்து திரும்பியதுமுதல் தனது வாழ்க்கையில் தான்பெற்ற அனுகூலங்களுக்கு நன்றிசெலுத்துமுகமாக ரோமைநகருக்குக் கால்நடையாக ஒருதிருயாத்திரையை ஆரம்பித்திருக்கின்றார். மான்செஸ்றர் நகரிலிருந்து தனது பாதயாத்திரையைத் தொடக்கியஇவர் ஏற்கனவே பிரான்ஸ்தேசம் போய்ச் சேர்ந்துவிட்டார்: தனது முழுயாத்திரையையும் நடத்திமுடிக்க நான்குமாதங்கள் செல்லுமென இவர் எதிர்பார்க்கின்றார்.

அப்போது இவர் வேலையாதுமில்லாது திண்டாடிய போது, தனது முதல் யாத்திரையை நடத்தினார். அதை முடித்துக்கொண்டு திரும்பிய மறுநாளே மான்செஸ்றர் நகரிலுள்ள நெசவுதொழில் ஸ்தாபனம்ஒன்றில் மணித்தியாலம் ஒன்பது பென்ஸ் சம்பளவீதம் சுத்தம்செய்யும் வேலைஒன்று அவருக்குக் கிடைத்தது. அந்தவார இறுதியிலே அவருடைய சம்பளம் ஒன்பது பென்சிலிருந்து பதினொரு பென்சாக உயர்ந்தது. பின்பு அந்த ஸ்தாபனத்தின் சகலபகுதிகளிலும் கடமைபார்த்துவந்து அதன் நிர்வாக தலைவராயும், பின்பு அதன் தலைவராயும் நியமனம் பெற்றார்.

"இதற்கெல்லாம் நன்றி செலுத்த வேண்டுமென்ற உணர்ச்சியாலேயே நான் ரோமைநகருக்கு யாத்திரை செய்கிறேன்; இதற்கென ஐந்துமாத விடுமுறை எனக்குத் தரப்பட்டிருக்கிறது; முழுத் தூரத்தையும் பாதயாத்திரையாகவே நடத்தி முடிப்பேன்; மேலும் பிரபல கத்தோலிக்க எழுத்தாளரும், கவிஞருமான ஹிலேயர் பெல்லக் அவர்கள்பிறந்த நூறாவது ஆண்டாகிய இந்த வருடத்திலே இந்த யாத்திரையை நான் நடத்துவதும் நன்றே. ஏனெனில், அவரும் இப்படியான ஒருபாதயாத்திரையை ரோமைநகருக்கு நடத்தினார்" என்று அவர் கூறுகிறார்.

## கிழக்கு ஜேர்மனியின் மேற்றிராணியார் காலமானார்

கிழக்கு யேர்மனியில் உள்ள ஒரேயொரு தனி மேற்றிராசனம் மெய்சோன் பிரிவு மேற்றிராசனமாகும், மறு மேற்றிராசனக்கள் கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் பொதுவாக இருக்கின்றன. மெய்சோன் பிரிவு மேற்றிராணியாராக சென்ற 12 வருட காலமாகச் சேவை செய்து வந்த ஸ்பெல்பெல் அடிகளார் சென்றவாரம் தமது 66–ம் வயதில் காலமானார், ஜெர்மனி தேசம் இரு பாகங்களாகப் பிரிவுற்றிருந்ததுபற்றி இவர்பெரிதும் கவலைகொண்டு இரு பகுதிகளும் ஒன்றாவதற்கு அல்லும்பகலும் உழைத்து வந்தவர். மகா யுத்தத்தின் பின்பு கிழக்கு ஜேர்மனியிலிருந்து வத்திக்கானுக்குச்சென்று பாப்பரசரைத் தரிசித்த முதல் மேற்றிராணியார் இவரே.

## குருமாரில்லாக் கஷ்டத்தை அகற்ற ஒருவழி

மத்திய ஆபிரிக்காவின் மேற்றிராணிமார் பலர் அப்பிரிவில் குருமாரில்லாக் கஷ்டத்தை ஓரளவு நீக்குவதற்காக கலியாணமான உத்தமரைக் குருமாராக்கப் பரி. தந்தை உத்தரவு அளிப்பாரோ என வினவி வத்திக்கான் அரசகரும காரியதரிசிக் கருதினாலுக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றனர். குருமார் விரத்தத்துவம் உடையவராயிருக்க வேண்டுமென்னும் கொள்கையை இம்மேற்றிராணிவார் ஆதரிப்பவராயினும், அப்பகுதியில் குருமாரில்லாக் கஷ்டத்தை அகற்ற வழிவகைகள் எடுக்கவேண்டியிருப்பதால் இவ்விண்ணப்பத்தைப் பாப்பரசருக்கு அனுப்பியிருக்கின்றனர்.

## அரசாங்கம் வழங்கும் வேதனம்

இத்தாலியரான மேற்றிராணிமார் ஒவ்வொருவருக்கும் வருடம்ஒன்றுக்கு 1.794 பவுணும், ஒவ்வோர் அதிமேற்றிராசன அதிமேற்றிராணிமார் ஒவ்வொருவருக்கும் வருடம்ஒன்றுக்கு 1,900 பவுணுமாக இத்தாலிய அரசாங்கம் வேதனம் வழங்குவதாக வத்திக்கான் இராச்சிய பத்திரிகைத் தகவல்அதிகாரியான வண. போஸ்ரோவலாயின் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார். இத்தாலியிலே குருமாருக்கும, மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாருமாகும். அரசாங்கத்தால் வழங்கப்படும் இந்த வேதனம் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்குமுன் இத்தாலி ஓர்.ஐக்கியப்பட்ட தேசமானபோது, அதனால் அபகரிக்கப்பட்ட திருச்சபைச் சொத்துகளுக்கெல்லாம் நஷ்டஈடாக வழங்கப்படுவதாகும். மற்றப்படி அவர்களின் சேவைகளுக்காகவும், இத்தாலி ஒரு கத்தோலிக்க நாடென்பதற்காகவும் வழங்கப்படுவதல்ல.

● பிரித்தானியிலே ஒஸ்மதர்லி நகரிலுள்ள சரித்திரப் பிரத்திபெற்ற புனித இராயப்பரின் அங்கிளிக்கன் சபைக் கோவிலிலே அந்நாட்டில் புரொட்டஸ்தாந்த சமயம் ஏற்பட்டபின் முதன் முறையாகச் சமீபத்திலே ஒருகத்தோலிக்க திக்கப்பாடற்பூசை நிறைவேறியுள்ளது. பிறிஸ்ரலைச் சேர்ந்த 20வயதுடைய றிச்சேட்வாக்கர் என்ற கத்தோலிக்க சர்வகலாசாலை மாணவன் வீதியில் விபத்துக்குள்ளாய் இறந்தபோது அவனுடைய ஆன்மசாந்திக்காகவே இந்தப்பூசை நிறைவேறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறையும் அகநானூறும்

— வண. ஹ. சி. தாவீதடிகள் — —

தொல் இலக்கியங்களில் தமிழ்மொழியின் பண்டைய நிலைமை தெளிவாய்த்தோன்றுமையான், தமிழ்ச்சொற்களின் படிப்படியான பொருள் திரிபுகளை இனிதே காணலாம். உதாரணம் ஒன்று: **பறை.** அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு— இவை நான்கும் தமிழ்மொழியின் மிகப்பழைய இலக்கியங்கள்: அதின் நான்கு சுவிசேஷங்கள் போன்றவை. இந்நூலின்கண் **"பறை"** ஏழு முக்கிய பொருள்களை உடைத்து. அவை ஆவன :-

(1) **மோதுதல்,** அகநா. 76 : 11 'சிறை **பறைந்து** உரைஇ" = கரையினை மோதிப்பரவி, உரை. இதுவே "பறை" எனும் பெயரின் வினையடி, **"கடிப்பு"** எனுந்தடியால் "பறை" எனும் இசைக்கருவி **மோதப்படு**தலினுன் என்க. ஒப்பிடுக நாலடியார் 100: 1 **"கடிப்பிடு** கண்முரசங் காதத்தோர் கேட்பர்"; அகநா. 251: 9 **"கடிப்பிடு** முரசம்".

(2) மோதலின் விளைவாக, **தேய்தல்** உண்டாகுமாதலின், **இத்தேய்தலும்** "பறை" ஆயிற்று: அகநா. 101 : 9 அடிபுதை தொடுதோல் **பறைய** = செருப்புக்கள் தேய, உரை.

(3) தேய்தல் ஏற்படுதல் தொடுதோற்குமட்டுமன்று : கடுங்காற்றினுல், கோடைவெப்பத்தினுல், மரங்களின் இலைகள் யாவும் **வீழ்ந்து கெட்டொழிதலுமு**ண்டே அகநா. 67 : 3—4 **"பறை"**யுடன் (= பறைபு + உடன்) மரம் புல்லென்று" = இதனுல் மரம் பொலிவற்றது, உரை.

(4) இதேபோல், உவர்மண் அரித்தலால் **மயிர் கழிந்து** போகின், அதுவும் **"பறை"** யாகும் : அகநா. 387:4 "உவர் உணப் **பறைந்த** ஊன் தலைச் சிறு அரொடு."

(5) மலையினின் அருவிகள், மழையின் கொடிய வீழ்ச்சியினுல், வேக நீரோட்டமாய் மாறி, கங்கு கரைகளை மோத, மலைச்சாரல்கள் பறிந்தால், அதுவும் **பறையே** = பறிந்த இடம். அகநா. 167 : 17 பால் நாய் துன்னிய **பறைக்கண்** சிற்றில்."

(6) முரசின் கண்களை கடிப்பினுல் மோதுவபோல், பட்சிகள் தம் சிறகுகளினுல் தம் உடலை அடிப்பதின் நிமித்தம், அச்சிறகுகளும் **பறைபாம்.** அகநா. 38 : 11—12 "**வன்** பறை மடக்கிளி". இப்பறையினுதவியினுல், அப்பறவைகள் பறந்து செலின், அதுவும் பறையாம். அகநானூற்றின் 33 : 4 தொடங்கி 12 இடங்களில் இக்கருத்தில், தொழிற்பெயராகத் தோன்றும். மேலும், வினையடியாகவுங் காட்சியளிக்கும்: அகநா. 170 : 6—7 "வண்டினம் களிசிறந்து **பறைஇய** தளரும்" = **பறத்தற்கு இயலாது** சோரும், உரை.

(7) இப்பறையெனும் வினையினின்றே, **மோதப்படும்** இசைக்கருவி என்ற கருத்தில், **"பறை"** எனும் பெயர் அகநானூற்றின்கண் **15 : 4** தொடங்கி 13 இடங்களில் தோன்றிற்று. உதாரணமாக: அகநா. 321 : 3 "விசித்து வாங்கு **பறையின்** விடர் அகத்து இயம்ப" = **பறையொலி**

செட்டினைத் தமிழகராதியின்கண் இவ்விதமாகத் தெளிவாயும், படிப்படியாகவுங் கருத்துகள் விபரிக்கப்பட்டிருக்கின்றனவோ நீரே சொல்லுமின்.

# சொற்பிறப்பு — ஒப்பியல் தமிழ் அகராதியும் தாவீது அடிகளாரும்

(புனித பத்திரிசியார் கலாசாலையில் 12-7-70-ல் இவர் அளித்த சொற்பொழிவின் மர்மமும் தாற்பரியமும்).

இந்த அகராதிபற்றி நாம் முன்பே கேள்விப்பட்டிருக்கின்றோம். இதன் முதல் ஆறு பாகங்கள் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், அவர்களால 1938—1946-ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. ஏனைய பாகங்கள் எழுதி முடிக்கப்பெருது ஒரு குறைநூலாகவே இதுவரைகாலமும் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் யாதோ தெரியாது. இவ் ஆராட்சியில் ஈடுபடுவதற்கு தகுந்த அறிஞன் தமிழகத்தில் உதிக்கவில்லைப்போலும். ஆனுல், தமிழகம் செய்த தவப்பயன் பன்மொழிப்பாண்டித்தியம் பெற்றவரும் இவ் ஆராய்ச்சியில் முன்னின்று உழைப்பவருமான தாவீது அடிகளார் இத்துறையில் முன் வந்துள்ளார். இத்துறையில் அடிகளாருக்குரிய தகமைகளும் சாலச்சிறந்தன. இவர் 32 மொழிகளில் வல்லுநர். ஒவ்வொருமொழியையும் அவ்வம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டதெனக்கூற வல்லவராவர். இலக்கண இலக்கியப் போட்டியிடக்கூடிய வல்லவர். மேலும் ஜேர்மனி, இங்கிலாந்து, ருஷியா, அமெரிக்கா, பிரான்சு, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று இத்துறையில் அறிவு பெற்ற பெரியார். அடிகளார் அவ்வப்போது எழுதும் ஆராய்ச்சிக்கட்டுரைகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் வெளியிடும் கட்டுரைகள் சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு அகில உலகமும் போற்றும் பேரறிஞராகிய தாவீது அடிகள் இத்துறையில் ஈடுபட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும்என நேற்றை முதற்றாம் பூரணமாக உணர்வோம்.

சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியின் அருமை பெருமைகள் இன்னும் நம்மிற் பலருக்குத் தெரியாது. இதில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. (1) சொற்பிறப்பு (2) ஒப்பியல். சொற்பிறப்பை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு சொல்லும் ஆரம்பத்தில் ஓரசைப்பதமாகத்தான் தோன்றியது என்பது அடிகளார் கருத்து. இத்திறப்பு ஏனையமொழிகள் பலவற்றிகில்லை. தாவீது அடிகளார் தமிழ்மொழியில் உள்ள சொற்கள் பலவற்றை எடுத்து, அவற்றின் ஆரம்ப வடிவத்தையும் அப்போது அவற்றின் பொருளையும் தமிழ் மொழியில் மட்டுமன்றி, ஏனைய த்திராவிட மொழிகளிடத்தும் மற்றும் இக்குடும்பத்திற் கண்மையான மொழிகளிடத்தும் ஆராய்ந்து, அவற்றை அழகாக எடுத்து விளக்கினர் நேற்று. அடிகள் எதையும் குருட்டு வாக்கில் சொல்லாது, தக்க சான்றுடன் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியவகையில் கூறுவது போற்றுதற்குரியது. நாம் வழங்கும் சொற்களின் ஆரம்பநிலையையும் அதன் காரணத்தையும் அறிந்தபோது நம்மை அறியாமலே நாம் குதூகலம் அடைந்தோம். இவ்வரும் பணியைத்தான் அடிகளார் செய்துவருகின்றார் என உணர்ந்தோம். அடுத்து ஒப்பியல் ஆராய்ச்சியை எடுத்தால், பல மொழிகளிலுள்ள திராவிடப்பண்டைய சொற்களின் உச்சரிப்பு அவை கூறும்பொருள் ஆகியவற்றில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை திராவிடக்குடும்பமொழிகளில் மட்டுமன்றி உலக மொழிகள் பலவற்றிலும் ஆராய்ந்து, தமிழ்மொழிக்கும் அவற்றிற்கும் இடையேயுள்ள உறவையும் அவற்றின் அளவையும் தன்மையினையும் ஆராய்வதாகும். இவ்வாறு ஆராய்கையில் நாம் தமிழிலுள்ள சொற்கள் சிலவற்றின் ஆதி உருவத்தையும் பொருளையும் கண்டு நெருநல் இன்புற்றோமன்றோ! உ-ம், நம்மிடம் புடலை என்றல் என்னவென்று யாராவது கேட்டால் புடலங்காய் என்பர். ஏன் அப்படி வந்தது என்று கேட்டால் அது அதனின் பெயர் என்று மட்டுமே கூறமுடியும். ஆனுல் தாவீது அடிகள் தெலுங்கு மொழியில் அதன் காரணத்தைக் காண்கிறுர். அதில் "பொடலு" என்றல், நீண்டு செல்வது என்றே பொருள். இங்ஙனமே அநேகத்தமிழ்ப் பதங்களை நேற்று முதன்முதல் முழுவதுஉம் விளங்கினேம். வந்த 300 பெயர்களுக்கும் இச்சொற்பொழிவு ஒரு விருந்தாகவே இருந்தது.

செல்வமலர் ஞானப்பிரகாசம்

# ஆபிரகாமே என்ன செய்தாய்?

இறைவனின் பொறுமையைக் கணித்துக் கண்டுபிடித்து மதிப்பிடக்கூடியவன் யார்? ஒரு தாயின் பொறுமை இணையற்றதென்று புகழ்ந்தேற்றுகின்றது இந்த உலகம். ஆனுல், இறைவனின் பொறுமையோ அதிலும் மிகமிக அளவற்றது; அளவிட முடியாதது. நாம் பாவிகளாயிருந்து, அபாத்திராயிருந்து, கடின மனமும் பிடிவாதகுணமும் காண்பித்து அவருக்குக் கீழ்ப்படியாதிருந்துவர, அவருடைய கற்பனைகளை அனுசரியாதிருந்துவர, அவ்வாறிருந்தும் அவருடைய அன்பும், அருளும், ஆசியும் பொழியப்பெற்று இன்னமும் இந்தப் பூவுலகில் நாம் உயிர் வாழ்ந்திருப்பதே அவரின் இணையற்ற பொறுமைக்கு அரியதோர் சான்றுகும் அன்றோ!

சீரியாவிலே பிதாப்பிதாவாகிய ஆபிரகாமைப் பற்றிய — அதிகம் படிப்பிணைக்குரிய சம்பவம் ஒன்று இணுவரை சொல்லப்பட்டுவருகிறது. அவர் தினமும் ஓர் ஏழை யாசகனையோ அன்றேல் அந்நியன் ஒருவனையோ அழைத்துத் தம்முடன் பந்தியமர்த்து உணவருந்தச்செய்து சந்தோஷமாக வழியனுப்பிவைக்கும் வழக்கமுடையவராய் இருந்து வந்தார். அவ்வாறுக ஒரு நாள் சாயந்தரம் அவர் தனது கூடாரத்தின் வாயிலருகே நிற்கும்போது தூரத்தில் வயோதிபன் ஒருவன் கையில் ஓர் ஊன்றுகோலின் உதவியுடன் தள்ளாடித்தள்ளாடி அதிகம் சிரமப்பட்டு நடந்துசெல்லக் கண்டார். உடனே அவர் தனது ஊழியரை அழைத்து, அவ்விதம் கஷ்டப்பட்டு நடந்துசெல்லும் அந்த வயோதிபனைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தார். அவர்களும் சென்று அவனை அங்கே அழைத்து வந்தனர். அவன் தனது கூடாரத்துக்குச் சமீபமாக வந்ததும் ஆபிரகாம் எதிர்கொண்டுசென்று மிகுந்த பட்சத்துடன் அவனை வரவேற்றுர். அக்காலத்து வழக்கப்படி அவர் தண்ணீர் கொடுத்து அவன் தனது கைகால் முகத்தைக் கழுவச்செய்தார். அதன்மேல் அவனைத் தன்னுடன் இராப்போசனம் அருந்தும்படியாய் உள்ளே அழைத்துச் சென்றுர். அவனும் முகமலர்ந்து அவருடன் போசனஞ் செய்ய அமர்ந்தான். ஆனுல், உணவருந்துமுன் அவன் இறைவனைத் துதியாது, அவருக்கு நன்றிசொல்லாது சாப்பிடத் தொடங்கியதை ஆபிரகாம் அவதானித்தார். அவ்விதம் அவன் நன்றித்துதி சொல்லாது சாப்பிடத் தொடங்கிய காரணம் யாதென்று அவனை வினவினர். அவனே தான் அக்கினியை வழிபடுகிறவனென்றும், இறை நம்பிக்கை தனக்கு இல்லையென்றும் விடையளித்தான். இதைக் கேட்டதே ஆபிரகாமுக்கு எழுந்தது கடுஞ்சினம். பந்தியைவிட்டு எழுந்தார். உடனடியாக அடுத்த கவளம் எடுத்து வாயில் வைக்க விடாமலே இரவென்றும் பாராது கூடாரத்திலிருந்து வெளியேற்றிவிட்டார் அவனை.

அப்பொழுது அந்த வயோதிபனும் சினங்கொண்டவனுய் ஆபிரகாமைச் சபித்தான். அம்மட்டா! அவருடைய இறைவனையுமே சபித்துக்கொண்டு முன்போலத் தள்ளாடித் தள்ளாடி அப்பால் நடந்து போனுன். அவன் போனபின் இறைவன் கனுவிலே ஆபிரகாமுக்குத் தோன்றி, அத்துணை பெருங் கஷ்டப்பட்டு நடந்து உன்னிடம் வந்த அவ்வயோதிபன் எங்கேயென்று அவரை வினவினர். "அவன் எங்கேயென்று எனக்குத் தெரியாது; அவன் இறை நம்பிக்கையில்லாத ஒரு நாஸ்திகனுய் இருந்தமையாலே நான் அவனை வெளியேற்றிவிட்டேன்" றென்று பதிலளித்தார். அப்பொழுது இறைவன் சொல்லுவார்:

"ஓ ஆபிரகாமே, நீ என்ன செய்தாய்? பொறுமையில்லாது, தருமசிந்தையில்லாது, மனுத்தன்மை என்பதில்லாது, வெஞ்சினங் கொண்டு தஞ்சமற்று வந்த அந்த விருத்தாப்பியனுக்கு என்ன செய்தாய்? பசிக் கொடுமையால் வாடி உன்னை நாடிய அந்த ஏழை யாசகனைப் பசியாற்றுது, இரவென்றும் பாராது பட்டினியோடு போகவிட்டு என்ன பெருங் கொடுமை செய்தனை? அவன் ஒரு நாஸ்திகன் என்பது நாம் அறிந்ததே. ஆயினும், கடந்த ஒழு முழு நூற்றுண்டுகாலமாக நாம் பொறுமையாயிருந்து, அவன் பிழை பொறுத்து, அவன் செய்ததெல்லாம் சகித்து வந்திருக்கிறோம். ஒரு தீங்கும் வாராது அவனைப் பாதுகாத்து, அவனுக்குத் தேவையானதெல்லாம் தேவையானபோது அளித்து வந்திருக்கிறோம். ஆனுல், அவன் ஒரு தீங்கும் உனக்குச் செய்யாதிருக்க ஒருசில கணமேனும் பொறுத்திராது, அவன் செயலைப் பொறுமையுடன் நீ சகியாமற் போனமை வருந்தத்தக்கது."

இது செவியில் விழுந்ததே ஆபிரகாம் திகிலடைந்தார், கவலை மிகுந்தார், தான்செய்த பிழையை நினைந்து உளம் வருந்தினர். அந்தட்சணமே அந்த நள்ளிரவில்தானே அந்த ஏழை வயோதிபனைத் தேடிப் புறப்படலானுர். அங்கும் இங்குமாக நெடுந்தூரம் அலைந்தலைந்தபின் அவனைக் கண்டுபிடித்தார். காம்இரண்டும் எடுத்து ஒரு முறைக்குப் பலமுறை அவனிடம் மன்னிப்புக் கேட்டார். திரும்பவும் தனது கூடாரத்துக்கு அவனைப் பரிவாக அழைத்து வந்தார். மீளவும் அவனைப் பந்தியமரச்செய்து, உணவளித்து உபசரித்துச் சந்தோஷப்படுத்தினர்.

இச்சம்பவத்தின் உண்மை பற்றி உசாவி ஆராய நாம் ஈண்டு வரவில்லை. ஆனுல், இறைவனின் அணைகடந்த பொறுமையை இது சந்தேகமற விளக்கிக்காட்டுகிறது என

(7-ம் பக்கம் பார்க்க)

## — ஞானம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " மடுப்பதியில் கண்டேன் "

— நீ. மரிய சேவியர் —
(திருமறைக் கலாமன்றம்)

**யார் அவள் ?**

அருள் தவழு நிலவு மகள் அமலி அன்னை
அழகு மழை குலவு முகில் கருணை அன்னை
இருள் ஒழிய இறையவனை ஈன்ற அன்னை
இளமை மொழி அமரகவி போன்ற அன்னை

**ஏன் அவள் ?**

அலை கடலின் கரை தெரிய விளங்க வேண்டும்
தலை உயரும் கொடி படரக் கொம்பு வேண்டும்
சிலை வளரும் கலை பொறிக்கச் சிற்பி வேண்டும்
நிலை தளரும் எமை அணைக்க அன்னை வேண்டும்

**எங்கே அவள் ?**

பிழை உணர்ந்து வழி திருந்தும் முகத்தில் கண்டேன்
பிள்ளைகள்போல் அழுத கண்ணீர்க் கடலில் கண்டேன்
மழை சொரிந்த மலர்க்குவியல் மனத்தில் கண்டேன்
மக்கள் வழிந்தோடும் மடுப் பதியில் கண்டேன்

**எப்படி அவள் ?**

பக்தர் முறை இடுகுரலைப் பரிவாய்க் கேட்பாள்
பாசமுறு தாய் நிதமும் வாரி ஏற்பாள்
சக்தி நிறை சற்குருவின் தயவிற் சேர்ப்பாள்
சங்கடங்கள் தீர்த்து மடுப் பதியில் மேய்ப்பாள்.

### இருளடைந்த வானிலே உதித்த தாரகை
### பாவச் சேறுள்ள உலகிலே மலர்ந்த தாமரை

# இதோ! ஆரோபணமாகிறாள்

அதோ! தன் அன்புடையான் மேல் ஊன்றிக்கொண்டு, இன்ப சுகங்களால் நிறைந்து, வனாந்தரத்தில் இருந்து எழும்பி வருகிற இவள் யாரோ? இருள் சூழ்ந்த இரவின் பின் சூரியனின் உதயத்தை அறிவிக்கும் உதய தாரகை இவள்தானோ? ஆம்! அவள்தான். அன்னை மரி காலத்தைக் கடந்த வரை தனது உதரத்தில் கர்ப்பம்தரித்தாள். இறைவனின் தாயானாள். எனவே, வல்லமை எனப்படுபவர் தனது தாய்க்கு உவந்தளித்த சலுகை இதுவே. மற்றவர்களைப் போன்று, ஆதாமின் ஏனைய மக்களைப்போல கடைசிநாள்வரையும் உத்தானத்துக்குக் காத்திராமல், உடனே கல்லறையிலிருந்து, ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் விண்ணக வீட்டுக்குத் தன் மகனால் எடுத்துக்கொள்ளப்பட்டாள். சந்திரனைப் போல் அழகும், சூரியனைப் போல் காந்தியும் படைத்தவளாய், கொடிகள் பறக்கப் போருக்கு முஸ்திப்பாயிருக்கின்ற படையைப்போல் கெடியை வருவிக்கத் தக்கவளாய் அருணோதயம்போல் ஆரோபணமாகின்றாள் தன் மகனின் சிம்மாசனத்தருகில். கன்னிமை பழுதுபடாமல் கடவுளைப்பெற்றவளின் சரீரம் கல்லறையில் பழுதுபட முடியுமா? முடியவே முடியாது. மனிதா, மண்ணாய் இருக்கிறாய் திரும்பவும் மண்ணாய்ப் போவாய்; தூசியாய் இருக்கிறாய் மீண்டும் தூசியாய்ப்போவாய் என்னும் ஆணைக்கு விதிவிலக்காய் திகழ்கிறாள் மரியாய். கிறிஸ்து மரியாயை அதிகம் நேசித்தார். கல்லறையில் அவளின் பரிசுத்த உடலை ஒருகணமேனும் வைக்க அவர் விரும்பவில்லை. எனவே, கிறிஸ்து தெய்வீக வல்லமையால் ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் அவளை எடுத்துக்கொண்டார். மரியாய் ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாவிட்டால் அவளின் புனித உடலைக் கொண்டிருக்கும் கல்லறை உலகில்எங்கே? புனிதவாளர்களின் பரிசுத்த பண்டங்களைப் போன்று அவளின் பரிசுத்த பண்டம் எங்கே? அவளின் சரீரம் உலகில் இருந்தால் அந்தப் புண்ணிய பூமிக்கு மக்கள், திரள்.திரளாக யாத்திரை செய்வார்களே! உண்மையாகவே—மரியாய் மோட்சத்துக்கு ஆரோபணமாகினாள்.

கடவுளைத் தனது உதரத்தில் சுமந்தவள், அருள் நிறைந்தவள், தனது மகனின் இரட்சணிய அலுவலிலும், அவரின் உத்தானத்திலும் பங்குபற்றினவள், ...

...துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது மிகவும் பொருத்தமானதும், தகுந்ததும், சிறந்ததுமாகும். கடவுளைச் சுமந்தவளின் புனித உடல் பூமியின் மடியில் கிடப்பதற்கு அது ஏற்ற இடமல்ல. எப்படி இறைமகன் மோட்சத்தைவிட்டு பூலோகத்துக்கு வந்து மரியன்னையின் உதரத்தில் வாசம்பண்ணினாரோ மரியன்னையும் பூலோகத்தை விட்டு, மோட்சம் சென்று தன் மகன் வலதுபாரிசத்தில் வாசம்செய்ய வேண்...

<blockquote>"லீபானினின்று வா ; மணவாளியே லீபானினின்று இறங்குவாயே! சிங்கங்களுக்கும் சிவிங்கிகளுக்கும் ஒதுக்கிடமான அமனுமலை, சானீர்மலை, ஏர்மோன் மலை இவைகளின் கொடு முடியிலிருந்து வா! மகுடாபிஷேகம் பண்ணப்படுவாய்."</blockquote>



# மடுத்திரு சேத்திரத்தின் நடுநாயகமான பரிசுத்த செபமாலை மாதா



ஸ்ரீலங்காவின் ஞானவளம்

மலையேபோன்று எம்மை இடுக்கண்கள் பல எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம் திருமறையை இன்னல்கள் பல எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம்மனதைக் கவலைகள்பல எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம்மை வறுமையும், சிறுமையும் எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம்மை உலகம், சரீரம், பிசாசு எதிர்கொண்டு வரலாம், ...

...ண்டனர், அதனால் அந்தச் சத்திய சுடர் தங்கள் மத்தியிலும் ஒளி செய்யவேண்டுமென்று அவரை வேண்டி நின்றனர். அவர்களின் வேண்டுகோளுக்கு அவரும் செவி சாய்த்தார். தம்முடனிருந்த வண. பிரான்சீஸ் சவேரியார் சுவாமியாரை மன்னாருக்கு அனுப்பிவைத்தார்: அவரும் வேதபோதக தொண்டில் தீவிரமாக ஈடுபட்டார்: சிறிதுகாலத்திலே மன்னார் கத்தோலிக்க சமயத்தின் ...

ஸ்ரீலங்காவின் ஞானவளம பொருந்திய கத்தோலிக்க திருசேத்திரங்களுக்கெல்லாம் ஒரு நடுநாயகம்போலத் திகழ்வது மருதமடுவெனில் மிகையாகாது. அத்திரு சேத்திரத்தை நினைக்குந்தோறும் ஞானமனோகரம் பிறக்கும். கானகத்திடையே எழுந்தருளிக் காட்சியளிக்கும் வானோர்க்கரசியான செபமாலை இராக்கினியின் திவ்விய சந்நிதானத்தை நோக்குந்தோறும் ஞானனந்தம் பெருக்கெடுக்கும். ஆடி மகோற்சவமாய் இருந்தாலென்ன, ஆவணி மகோற்சவமாய் இருந்தாலென்ன, வேறெந்த மகோற்சவமாய் இருந்தாலென்ன, பக்தர்களின் மனங்களை யெல்லாம் அஃது கவர்ந்திழுக்கும்; அதனால் அவர்கள் பல்வேறு நகர்கள், பட்டினங்கள், கிராமங்களிலிருந்து மருதமடுத் திருசேத்திரத்தை நாடி, ஆங்கு திரிலோக நாதனைத் தமது திருக்கரத்தில் தாங்கியவராய்த் திவ்வியசிம்மாசனங் கொண்டெழுந்தருளியிருக்கும் பரமநாயகியின் திருப்பாதாரவிந்தங்களைத் தேடிச் சமயபேதம், சாகியபேதமின்றியே திரள்திரளாய்ச் சரியத் தொடங்குவார்கள்.

பூர்வத்திலே தேவப்பிரசைகளான இசிறவேல் சாதியார் பாலுந்தேனும் பெருகும் கானான் தேசத்தின் கடைசி எல்லைகளினின்றும் ஜெருசலேம் தோவாலயத்தை நோக்கித் திருயாத்திரையாகப் புறப்பட்டுத் தேவநாமத்தைப் புகழ்ந்துகொண்டும், திவ்விய கீதங்களைப் பாடிக்கொண்டும் பக்திபரவசத்துடன் செல்லுங் காட்சியைக் கண்ணுறும்போது அஃது ஓர் அபூர்வ காட்சியாய் இருக்குமாம். அவ்வாறே ஸ்ரீலங்காவின் கடைசி எல்லைகளினின்றும் மருதமடுத் திருசேத்திரத்தை நோக்கிப் பக்தகோடிகள் யாத்திரை புறப்பட்டுத் தேவதாயாரையும், அவரது திருக்குமாரனையும் துதித்துக்கொண்டும், திவ்விய கீதங்களைப் படித்துக்கொண்டும், இசிறவேலர் 150 இராகமுடைய தாய் இசைத்த அதிசய வாத்தியத்தின் அறிகுறியான 153 மணிச் செபமாலையைப் பயபக்தியாய்ச் செபித்துக் கொண்டும் செல்வதைக் கண்ணுறுமிடத்து அஃதும் அபூர்வ காட்சியாய் இருக்குமன்றோ!

அன்று சங்கிலி மன்னன் யாழ்ப்பாண இராச்சியத்திலே ஆட்சிபுரிந்த காலத்தில் மன்னார் வாசிகள் கத்தோலிக்க திருமறையைத் தழுவ ஆரம்பித்தார்கள். தென்னிந்தியாவிலே அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் அயரா முயற்சியால் கத்தோலிக்கசமயம் அதிகம் தீவிரமாகப் பரந்துவருகிறதெனக் கேள்வியுற்ற மன்னார் மக்கள் தாங்களும் அதில் சேரவேண்டுமெனத் தீராத ஆவல் கொ... நிலைக்களமாயிற்று. பின்னர் மன்னாரின் சுற்றுடல்களிலும், மற்றும் கிராமங்களிலும், மாந்தையென்னும் ஊரிலும் பரந்துகொண்டது. இதனை அறியவந்தான் சங்கிலி மன்னன். அடங்காத சினங்கொண்டான். ஆயுதபாணிகளான ஐயாயிரம் வீரர்களுடன் மன்னாரிலே படையெடுத்தான். மன்னார்வாசிகளைப் பழிவாங்கத் தொடங்கினான். அவர்களிலேஒருயௌவனரானவண. பிரான்சீஸ் சவேரியார் சுவாமி உட்பட ஆடவரும் பெண்களும், பிள்ளைகளுமாக எழு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

கொண்டு வரலாம், எம்மை வாட்டலாம், வருத்தலாம், இடர் செய்யலாம், இம்சைப்படுத்தலாம், ஆனால்,
மலைமீதேற்றிய மணித்தீபம் போன்று செபமாலைநாயகியே!
நீர் மருதமடுத் திருப்பதிக்கண் என்றும்போல,
எம் தாயாக எழுந்தருளியிருக்கும்போது எமக்கு அச்சம் ஏது? அங்கலாய்ப்பு ஏது?

## அருள்தாராய்!

வானத்து நீலமெலாம் வடிவழகாற் செம்மையுற
வதனத்தின் பேரொளிக்கு வண்ணநிலா வாட்டமுற
ஞானக் குறுநகையில் ஞாலமெலாம் பொன்னுக
நந்தா மணிவிளக்காய் நயனங்கள் ஒளிகாலத்
தேனைப் பிழிந்தமுது தித்திக்கும் பாதமலர்
தேடி அடியோர்கள் திருக்கூட்டம் நெஞ்சுருகக்
கானந் தனிலெழுந்து கருணைக் கரம்நீட்டும்
கன்னிச் சுவைக் கரும்பே! கடைக்கண் அருள்தாராய்!

* * *

திருமறைக்கு நாயகியே! தெவிட்டாத தீந்தமிழே!
தெய்விகப் பேரழகைத் திரட்டிவந்த தெள்ளமுதே!
அருள்வடிவும் நிறையழகும் அணுவணுவாய்ப் பூத்தவளே!
அன்னையர்க்கோர் அன்னையெனும் கன்னிமையின் பெட்டகமே!
பெருமை பெறுங் கற்பினுக்கோர் பேரணியே! வான்நிதியே!
பெண்ணுலகே கண்டறியாப் பெண்மையெனும் அதிசயமே!
தருவனத்தின் தலைமகளே! வைகறையின் தாரகையே!
தவமுனியின் தவத்துணையே! தாசரெமக் கருள்தாராய்!

* * *

மேகமணிப் பீடமதில் மின்னுகின்ற மீனரசி!
மேன்மையுறு குணநலன்கள் மீதூரும் வான்வில்லே!
தாகந் தணித்தருளும் தங்கத்தின் பூந்தடமே!
தாரணியிற் செல்வமெலாந் தந்தருளும் பூவனமே!
மோகப் பெருவலையை மூண்டெரிக்கும் அக்கினியே!
மோட்சத் திருநாட்டின் முடிசூட்டும் மடுத்தாயே!
ஆகம் மனங்குளிர அரவணைக்கும் பேரன்பே!
அதிரூப சௌந்தரியே! அடைக்கலமே! அருள்தாராய்!

— "யாழ். ஜெயம்"

## அமல உற்பவி!

அன்னை தாய்மரி! அமல உற்பவி
ஆதரித் திடுவாய்நீ அகிலராக்கினி
என்னை ஏற்றிடும் எந்தநாளுமே
ஏங்கி நிற்கிறேன் தாங்கிடுவாயே!
உன்னை அல்லது வேறுயாரிடம்
ஊரைக் காத்திட வேண்டுவேனம்மா!
புன்னை மரமிரு புனிதவரசியே
பூரித் தென்னைநீ புரிந்துகொள்வாயே!

*

பாவம் இல்லாப் பரம்பொருளானவர்
பரத்தில் இருந்து உலகுவந்திடப்
பாவம் தீர்த்திடப் பரிகரித்திடப்
பார்தனில் உன்னைப் பார்த்தெடுத்தாரே
பாவ மாசு உன்னை அணுகாப்
பார்த்துக் கொண்டார் உற்பவமிருந்தே
ஏவ மக்களின் தாயானநீயும்
எழுந்தருளினுய் உடலோடே யம்மா!

*

ஆண்டவர் அன்னைநீ! அருளின்ஊற்றுநீ!
ஆதர வற்றவர் அடைக்கலமும்நீ!
ஆண்டவர் வழியினை ஏற்றுநடந்திடும்
சம்ம னசுகள் இராக்கினியும்நீ!
வேண்டாப் பேயினை ஒழிக்கும் வல்லவி!
வேத போதகர் வேண்டுதலும்நீ!
தாண்டவர் பற்றுநீ! தயையின் தடாகம்நீ!
தாயே எங்கள் அமலஉற்பவியே!

— பாக்கியம்.

...டும். இது இன்றுமகனே
—ஆத்துமத்தோடும், சரீ இவளுக்கு அளித்த தனிக்
ர்த்தோடும் மோட்சத் கொடையாகும்.

— V. அன்ரனி ஜோண்

## மடுப்பதியின் எழில்தானென்னே!

1. வானவர்க ளணிவகுத்து முறைமுறையாய்
மாமலர்ப்பூம் பதத்தினையே வணங்கிப்போற்ற
ஞானமிகு சிட்டரெல்லாம் மகிழ்ச்சிலங்க
நட்புயரும் பரலோக அரசியாக
மோனமிகு திரித்துவத்தின் மூன்றுபேரால்
முடிசூட்ட முதல்வியென விளங்குமன்னை
தேனலரு மடுப்பதியி லெழுந்த காட்சி
சிறியன்நா னெடுத்துரைக்க அன்புகூரும்.

2. அருட்பூத்த அகத்திறெனி முகத்தின்மின்ன
ஆறிரண்டு வானுடுக்கள் சிரத்தின்மின்ன
மருப்பூத்த மலர்க்கரத்தின் மகனார்மின்ன
மங்காது செங்கதிரோன் மருங்குமின்ன
திருப்பூத்த மலர்ப்பதத்தின் மதியம்மின்ன
சேணுயரா லயத்துநவ மணிகள்மின்ன
இருட்பூத்த வினையகற்று மெங்களன்னை
எழுந்ததிரு மடுப்பதியின் எழில்தானென்னே!


3. ஓவியங்கள் வனப்புடனே குருடர்தீட்ட
ஓடிவந்து முடவர்நட மாடியேத்த
காவியத்தின் கருத்ததனை மூகையோர்கள்
கனிவுடனே படித்தெவர்க்கும் விளக்கங்கூற
மேவியிரு கையிழந்தோர் கரத்தை நீட்டிக்
கூன்மதிவேய் பதத்தினையே வருடிவாழ்த்த
தேவியர சியற்று மடுப் பதியிற்கண்ட
தித்திக்கும் புதுமைகளைத் தீட்டலாமோ!

4. சலதிதனில் நீர்பெருகி யிருந்திட்டாலும்
தாகமதைத் தீர்ப்பதற்குத் தகைமையுண்டோ?
நிலவுலகி னிருளகலப் பருதிகிழைத்
திசைவரையில் கண்டல்லால், தீபங்கோடி
பலதிசையும் பரந்திடினும் பகலதாமோ?
பரமதிரு அன்னையே உன்அன்பிலார்க்குக்
குலவுரிமை யாளர்பலர் இருந்திட்டாலும்
குறையாநின் கருணை மழைக் கிணையதாமோ!

5. அ(ற்)புயரப் பெற்றஅன்னை தன்னைத்தேடி
ஆவலித்து ஓடிவந்து 'அம்மா' வென்று
தன்மனத்துத் துயருரைக்கும் பிள்ளைதன்னைத்
தாங்கியணைத் தருள்சொரியும் தாயின்மேலாய்
பொன்பரவு முகமலர்க்கண் விழித்துஆசி
பொழிந்துதவு மடுப்பதியாள் எழுந்தகாட்சி
முன்னர்திரு யாக்கோபு கண்டஏணி
முதல்வியென யாவர்க்கும் விளங்கிற்றின்றே!

— க. மரிசாற்பிள்ளைப் புலவர்,
பெரிய கட்டைக்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!**

கோபம் பொல்லாதது. ஆத்திரம் அறிவை அழிக்கும் ஆயுதம் என்றால் கோபம் குடியைக் கெடுக்கும் அணுக்குண்டு என்று சொல்லலாம்.

கோபம் தன்னையும் கெடுக்கும்; எதிரியையும் கெடுக்கும். கோபத்தினால் சிலர் கொலைபோன்ற கொடுமைச் செயல்களைப் புரிகின்றனர். கோபம் உன் உள்ளத்தில் தோன்றவிடாதே. அப்படித் தோன்றினாலும் அந்தக் கோபத்தை வளரவிடக்கூடாது. பொங்கிவரும் கோபத்தை அப்படியே அடக்கிக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்.

கோபப்படுவதால் எந்தக்காரியமும் சித்திபெறாது. சாந்தத்தினால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கமுடியும். அதுவும் வெற்றிகரமாக முடியும்படி செய்யலாம். சாந்தத்திற்கு அத்துணை பெருமளவு சக்தியிருக்கிறது!

அகிலஉலகும் போற்றும் அண்ணல் மகாத்மாகாந்தி கோபக்காரராக இருந்தால் இந்தியா சுதந்திரம் அடைந்திருக்க முடியுமா? முடியவே முடியாது.

"பொறுத்தார் அரசாள்வார்;
பொங்கினார் காடுறைவர்."

— அண்ணா

# வேடிக்கையான பதில்

பிரான்ஸ் தேசத்தில் குருடோ என்றொரு பிரபு வசித்து வந்தார். அவர் குணசாலியாயினும் கண்டிப்பான குணமுடையவர். அவருக்கு மிகவும் பிரியமான பொழுதுபோக்கு வேட்டையாடுவதுதான். ஒரு நாள் வேட்டைக்குச் சென்று ஒரு கொக்கைச் சுட்டுக் கொண்டுவந்து தன் சமையற்காரனிடம் கொடுத்தார்.



சமையற் காரனோ நிரம்பவும் ஏழை: நம்பிக்கையானவன். ஆனால், மிகவும் புத்தி சாதுரியமிக்கவன். வேடிக்கைகள் செய்வதிலும் வல்லமை மிக்கவன்.

கொக்கைச் சுத்தப்படுத்தி முழுசாக கொதிக்கும் எண்ணெயில் போட்டுப் பொரியல் செய்தான். அது வெந்து கொண்டிருக்கும் பொழுதே அவனுக்கு மிகவும் பிரியமான ஒரு நண்பன் அங்கு வந்து சேர்ந்தான். அடுப்பிலிருந்து வந்த வாசனையால் ஆசை கொண்டு ஒரேயொரு கால் மட்டுமாவது தனக்குத்தரும்படியாக அந்த நண்பன் சமையல்காரனை வேண்டிக்கொண்டான். தனது பிரபுவின் கண்டிப்பான தன்மையை எவ்வளவோ எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சமையற்காரனை அவன் நண்பன் விடுவதாயில்லை. கடைசியாக வேறு வழியில்லாமல் ஒரு காலைமட்டும் அறுத்து அவனுக்குக் கொடுத்து விட்டான்.

இரவுச் சாப்பாட்டின் போது பிரபுவிற்கு ஒரு கால் இல்லாத கொக்குமட்டும் கிடைத்தது. அவர் கோபமடைந்து இன்னொரு கால் எங்கே? யார் சாப்பிட்டது? என்று கடிந்துகொண்டார். இப்பொழுது அந்த இரண்டாவதுகாலைக் கொண்டுவந்து தராவிட்டால் உன்னை வேலையிலிருந்து விலக்கிவிடுவேன் என்று பயமுறுத்தினார்.

இந்தச் சங்கடமான நிலைமையில் சமையல்காரனுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் கொக்கிற்கு ஒருகால் மட்டுந்தான் சார் இருந்தது என்று ஒருபோடு போட்டான்.

இதை நம்புவதற்கு பிரபு என்ன புத்தியில்லாதவரா? "முட்டாள்; என்ன உளறுகிறாய். ஒரு கால் உள்ள கொக்கை நான் எங்குமே பார்த்ததில்லை. என்னிடமா பொய் சொல்கிறாய்?" என்று அதட்டினார்.

"நான் சொல்வது பொய்யில்லை சார். சத்தியம்; உயிருள்ள கொக்கிற்கு ஒற்றைக் கால்மட்டும் இருப்பதை நான் உங்களுக்குக் காட்டமுடியும். என்னை நம்புங்கள்" என்று சொல்லி சமையற்காரன் மன்றாடினான். இருவருக்குள்ளும் பேச்சுப் பெருகி, வார்த்தைகள் முற்றி முழுச்சண்டையே வந்துவிட்டது. இறுதியில், "சரி உன்னை நான் சும்மாவிடமாட்டேன்; நாளைக் காலையில் கொக்கிற்கு ஒரு கால் தானுண்டு என்பதை நீ நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் உன் காலை வெட்டிப்போடுவேன்" என்று உத்தரவிட்டார் பிரபு. இரவு அமைதியாகக் கழிந்தது. சமையற்காரனுக்கோ நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

அதிகாலையில் எழுந்ததும் பிரபு சமையல்காரனை அழைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கே எப்பொழுதும் கொக்குகளைக் காணலாம்.

இருவரும் அங்கே வந்ததும் அநேக கொக்குகளைக் கண்டனர். அவையாவுமே ஒற்றைக் காலுடன் நின்று கொண்டிருந்தன. கொக்குகள் தூங்குகிறசமயம் வழக்கமாக ஒற்றைக்காலைத்தான் ஊன்றி நிற்கும், மற்றக்காலை உடலோடு சேர்த்துமடக்கிக் கொள்ளும்.

சமையற் காரனுக்கு உற்சாகமுண்டாயிற்று; தான் எதிர்பார்த்த காரியம் சரியானபடி வாய்த்து விட்டதென்றெண்ணிச் சந்தோஷமடைந்தான்.

"பார்த்தீர்களா சார்! நான் சொன்னது உண்மையென்றாகிவிட்டது. கொக்குகள் ஒரு காலுடன் நிற்பதை உங்கள் கண்களாலேயே நீங்கள் பார்க்கலாம்" என்றான் அவன்.

பிரபுவிற்குக் கோபம் பொங்கியெழுந்தது, "முட்டாளே! என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று சொல்லிக்கொண்டு, ச்சூ, ச்சூ என்று கத்தினார்.

கொக்குகள் தூக்கம் கலைந்து மற்றக்காலையும் தரையில் ஊன்றிப் பின் பறந்து சென்றன.

"இப்பொழுது பார் மடையனே! கொக்குகளுக்கு இரண்டு கால்கள் இருப்பது தெரிகிறதா" என்றார்.

"விஷயம் இதுதான் சார்; இப்பொழுது நீங்கள் ச்சூ, ச்சூ என்ற பிறகு தானே அவை இரண்டாவது காலை நீட்டின. இதே பிரகாரம் நேற்றிரவும் ச்சூ சொல்லியிருப்பீர்களானால் அந்தக் கொக்கும் மற்றக்காலை நீட்டியிருக்கும். நீங்கள் தவறவிட்டு விட்டீர்கள். நாம் இவ்வளவு தூரம் நடந்து சிரமப்பட நேர்ந்துவிட்டது" என்றான் மிகவும் அடக்கமாக.

பிரபுவிற்கு அவனது வேடிக்கையான பதிலைக்கேட்டுச் சிரிப்புத்தாங்கவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார். அவரது கோபமெல்லாம் பறந்தே போய்விட்டது.

"நல்லது ஊழியனே, உன் சாதுரியமான பதில் உன்னைக் காப்பாற்றிவிட்டது. நான் திருப்தியடைந்தேன். நாம் வீட்டிற்குத் திரும்புவோம்" என்று சொல்லித் சந்தோஷமாக அவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு திரும்பி வந்தார்.

# பாட்டியின் பேட்டி (4)

(முன் தொடர்ச்சி)

**அருள்:** பாட்டி, பாட்டி பாருங்களேன். பெரியம்மா பரிமளத்தையும் அழைத்து வந்தேன். ஏன் தெரியுமா? பெரிய காரியங்கள் பற்றி இன்று பேசப்போகிறா பாட்டி. கேட்டுப் போங்களேன் நீங்களும் என்றேன். வந்துவிட்டா.

**பாட்டி:** பேத்தி பரிமளமா? நல்லது. கிட்டவந்து உட்காரு மகளே. கண்டு கனகாலமாச்சுதே! ஏன் சுகவீனமாகவிருந்தாயா?

**பரிமளம்:** தேவன் தயவாலே நமது சேமம் நலமாயிருக்கிறது தாயே. வீட்டு வேலைகள் முடிவில்லாததாலே இந்தப் பக்கம் வந்து போக வசதிவாய்க்கவில்லை. இப்போதும் வில்லங்கமாகத்தான் கதை கேட்க இழுத்து வந்தார்கள் பிள்ளைகள்.

**பாட்டி:** உங்களுக்கு ஓய்வில்லாதஉழைப்புத்தான். வாசிக்கவோ, யோசிக்கவோ நேரமே கிடையாது. படிக்காமல், கேட்காமல் எப்போதும் வேலை வேலையென்று என்ன கோட்டையா கட்டப் போகிறீர்கள்.

**அன்பு:** கலவரத்தை விட்டுப்போட்டுக் கதையைத் தொடங்குங்கள் பாட்டி. யாழ்ப்பாணம் வந்திறங்கினது பற்றியல்லவா சொன்னீர்கள். அதின் பிறகு என்ன நடந்தது?

**பாட்டி:** யாழ்ப்பாணம் வந்திறங்கின முனிவரும் சீடனும் அங்குள்ள கிறீஸ்துவர்களைத் தேடுவதிலேதான் முனைந்திருப்பார்கள். 1658-லே பதிதரான ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்துக்கு அதிகாரிகளானதிலிருந்து கடுமையான கட்டளைச் சட்டங்களை விதித்துக் கத்தோலிக்க வேதத்தை முற்றாக அழித்துப்போட முடிவு செய்தார்கள். அதனால் 1687-ல் அங்கு ஒரு விதமான வெளி அடையாளமும் காணமுடியாமலிருந்தது. ஆகையால், இரகசியமாயிருந்த கத்தோலிக்கரைக் கண்டுபிடிப்பது கஷ்டமான வேலையாயிருந்தது. எனவே, இருவரும் யாசகர் கோலத்தில் வீடுவீடாகப் போய் ஆட்களை அவதானிக்கத் தொடங்கினார்கள். ஆனால், அதற்கிடையிலே வேறொரு வில்லங்கம் குறுக்கிட்டது. யோசவாஸ் வியாதியாய் விழுந்தார்.

**அருள்:** அதென்ன! பட்டபாடுகள் போதாதென்று இன்னுமொரு சிலுவை. ஆண்டவரென்றாற் போல அளவுக்கு மிஞ்சிச் சோதிக்கலாமா?

**பாட்டி:** அப்படிச் சொல்லக் கூடாது. ஆழமறியாமல் காலை விடப்படாது என்பார்களே. கடவுள் இயற்கையில் அமைத்த ஒழுங்கு எப்போதும் நடந்தே தீரும். சுயாதீன மனிதன் அதனுள்ளே நின்று துள்ளிக் குதித்து தொப்பிக்கரணம் போட்டு இலட்சியம் பேசுகிறான். அவன் ஓடிவிழுந்து ஓடிந்தென்ன, உடைந்தென்ன, மாய்ந்தென்ன மடிந்தென்ன, ஆண்டவனுடைய அறிவின் ஆழத்தை அளந்தறியவா போகிறான். அவன் வைத்த ஒழுங்கை அறிந்து அதன்படி ஒழுகுவதுதான் நமக்கு விழுப்பமான வழி. அதை விட்டு நான், நமது என்று கடவுள் முன்னாலே மமதை பேசுவது மதியீனத்தின் அடையாளம்.

**பரிமளம்:** எம் பெருமான் நம்மை வருத்துவது நம்மைக் கொல்லவல்லக் கொல்லவல்ல, பொல்லாக் குணம் மாற்ற. தாழ்மையைப் படிக்கத் துன்பம் போலும் திறமான முறை வேறேதுமில்லை. அப்படித்தான் முனிவரையும் புண்ணியத்திலே பயிற்றினார் போலும்.

**பாட்டி:** வழமையாகவே விரதத்தில் முதிர்ந்த முனிவர் கடற் பயணத்தில், போதுகடும்பசி யனுபவித்தாரென்று கண்டோமல்லவா? அதன் பின், மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் பிச்சை வாங்கின மிச்சத்தினாலல்லவா பசியாற்றினார். இதனாலே வயிற்றில் வியாதி வருவது வழமைதானே. அதுதான் யோசவாசுக்கும் நடந்தது. வயிற்றுவலி வயிற்றோட்டமாக மாறியது. பேதியோ கோதாரியோவென்று பயந்த ஊர்மக்கள் மடத்திலே கிடந்தவரைக் காவிக் கொண்டுபோய் ஊருக்கு வெளியே காட்டுக்குள்ளே போட்டார்கள். அவரைக் கவனித்துவந்த யோனும் சிலநாட்களுள் அதே வியாதியாய் விழுந்து பெலன்குன்றிப் படுக்கையானான்.

**அருள்:** அட, கடவுள் தானும் தனது அடியாரைக் கவனிக்க விரும்பாவிட்டால் அவர்கள் ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்துப் போட்டுக் கண்மூடவேண்டியதுதானே.

**பாட்டி:** அப்படியல்ல, மனிதனின் பெலனிலே உள்ள நம்பிக்கைக்கு முடிவு வந்த பிறகுதான் கடவுளின் வல்லமையும் அன்பும் காணப்படும். உலகில் இனி நம்பிக்கை ஏதுமில்லை. அந்நியருக்கு ஆன்மநன்மை செய்ய இவ்வளவு கஷ்டப்பட்டுவந்தும் வியர்த்தமாயிற்றே. இப்படியான நிசநிலையிலேதான் விறகுதேடிக் காட்டுக்குள்ளேபோன ஒரு பெண் இந்தக் கண்ணுறாவியான காட்சியைக் கண்டாள். கண்டவள் பயந்து ஓடவில்லை. அந்த நிர்ப்பாக்கியர் முற்பிறவியிலே செய்த கறுமத்துக்காகக் கிடந்து அழுந்திச்சாகட்டுமென்று விடவில்லை. இரக்கங் கொண்டாள். அவர்களுக்கு அவசியமான அரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வந்து பசியாற்றினாள். சில நாட்களுள்ளே இருவரும் எழுந்து உலாவக்கூடியளவுக்குப் பெலன்கொண்டு பழைய தேடல்வேலையைத் தொடர்ந்தார்கள்.

**அன்பு:** ஐயோ! அந்த மனுஷி கொடுத்த கஞ்சிக்கு என்னதான் கைம்மாறாகக் கொடுக்க முடியும். ஈழம் வாழும் கத்தோலிக்கர் எல்லாருமே அந்த மனுஷிக்குக் கடமைப் பட்டவர்களாயிருக்கிறார்கள்.

**பாட்டி:** ஏன்? உப்புக் கஞ்சிக்குமட்டுமா, பச்சைத் தண்ணீருக்குந்தானே சரியான சன்மானம் தருவேனென்று வாக்குப் பண்ணினாரே எங்களாண்டவர். அவரால் அவளை மறக்கவும் முடியுமா? மனிதர் மறந்துவிட்டால் அதிலேது நட்டம்? ஆர் அந்தப் பாக்கியவதி என்று உரிமை, பெருமை பாராட்டும் எவரையும் பட்டினப் பக்கத்திலே நாமறியவில்லை. இச்சம்பவம் யாழ்ப்

[மறுபக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தென்னமெரிக்காவைச் சேர்ந்த பெருநாட்டிலே சமீபத்தில் நடைபெற்ற பூமி நடுக்கத்தின்போது 2,000 கத்தோலிக்கர் பாதுகாப்புத்தேடி அங்கு நிறுவப்பட்டுள்ள கிறிஸ்துநாதரின் பிரமாண்டமான திருச்சுரூபத்தின் பாதத்தணடை விரைந்தார்கள். 15,000 பேர் பனிப்பாறையின் கீழ் அகப்பட்டு உயிர் துறந்தார்கள். எல்லாமாக உயிர் இழந்தவர்கள் 50,000 பேர் வரையிலாகும். வீடுவாசல்களை இழந்தவர்கள் 50,000 பேருக்கு மேலாகும்.

● நித்திரை செய்கிறவர்களின் இரத்தத்தை உறிஞ்சியெடுக்கும் வௌவால்களால் அவர்களின் இரத்தோட்டம் அதிகரித்திருப்பதைக் கண்டறிந்து, அதிலிருந்து மனித இரத்தம் உறைந்து கட்டியாவதைத் தவிர்க்கும் முறை ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். தற்போது இந்தமுறை குழிமுயல்களில் பரிசீலனை செய்யப்பட்டுப் பலன் கண்டிருக்கிறது.

● சின்னப்ப பாப்பரசர் வருகிற கார்த்திகை மாதம் ஆஸ்திரேலியாவுக்கு விஜயஞ் செய்யும்போது கிறிஸ்தவஐக்கியமுறையிலே அங்கு நடைபெறும் எந்த வைபவங்களிலும் தாங்கள் கலந்துகொள்ள விரும்புவதாகச் சிட்னி நகரிலுள்ள அங்கிளிக்கன்சபை, மெதடிஸ்தசபை, பிறெஸ்பிற்றேறின்சபை, கொங்கிறிக்கேஷனல்சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவ சமூகத்தினர் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

● இங்கிலாந்திலே லிவர்பூல்நகரில் புனித வின்சென்றின் போலுள்ள தமது பங்குக் கோவிலிலே அன்று சனிக்கிழமை ஏறக்குறைய ஒரு குருடரான வண. பேர்ணாட் விச்சே சுவாமியார் குருட்டு மணமக்களான பீற்றர், எலிசபெத் எனும் தம்பதிகளின் திருமணத்தை நிறைவேற்றி வைத்தார். அப்பொழுது மணவாளியின் மாண்டி எனற வழிகாட்டிநாய் அவர்களுடைய உறவினர், சிநேகிதருடன் பிரத்தியேக ஆசனத்தில் அமர்ந்திருந்தது. புதுமணத் தம்பதிகள் இருவரும் அங்குள்ள குருடருக்கான தொழிற்சாலையில் வேலைசெய்கின்றனர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தாலும், புனித யூதாவின் அனுக்கிரகத்தினாலும் அர்ச். அந்தோனியார், அர்ச். சதாசகாய இராக்கினியின் மன்றாட்டினாலும் நான் கேட்டுக்கொண்ட வேண்டுதல் அநுகூலமாயிற்று. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.
ஜெம்பட்டாத்தெரு.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

தவறைத் திருத்தத் தன் தலையையே அர்ப்பணித்த தவமுனி புனித ஸ்நாபக அருளப்பரின் வேண்டுதலால், என் மகனுக்கு உத்தியோகம் கிடைத்தமைக்குச் சாட்சியாக நேர்த்தியை நிறைவேற்றுகிறேன்.

மன்னார். ய. யோ.

● இம்மாதம் இலங்கையில் நிகழ்ந்த பெருவிபத்து புத்தளத்துக்கும், பாலாவிக்குமிடையிலுள்ள பாதுகாப்பற்ற றெயில்வே கடவையில் ஏற்படலாயிற்று. இந்த விபத்திலே இலங்கைப்போக்குவரத்துச்சபை பஸ்ஒன்றும், புகையிரதம் ஒன்றும மோதியதால் பிரயாணிகளில் 14பேர் அந்த இடத்திலேயே கொல்லப்படச் சுமார் 40பேர் காயமடைந்தார்கள். இவர்களிலும் சென்ற சனிவரையில் 6பேர் இறந்தார்கள்.

## ஆபிரகாமே ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

பதில் சந்தேகமில்லை. நாம் எத்தனையோதடவை அவருக்குக் கீழ்ப்படியாது இருந்திருக்கிறோம. எத்தனையோ தடவை அவரை நேசிக்க, அவரை ஆராதித்து வழிபாடு செய்ய, அவருக்குச் சேவை செய்ய, நன்றித்துதி சொல்லத் தவறியிருக்கிறோம். ஆயினும், "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல்" அதாவது, தன்னைக் கொத்தி வெட்டி, குடைந்து உழுது வருத்துவாரைப் பொறுமையோடு தாங்கும் பூமியைப்போல் அவரும் பொறுமையோடு எல்லாவற்றையும் சகித்துவருகின்றார். இன்றுமே தொடர்ந்து வாழ்வும், உணவும், மற்றும் லௌகிக நன்மைகளும் உவந்தளித்து வருகின்றார். மனந்திரும்பித் தம்மிடம் வருவதற்கும், தம்மை நேசிப்பதற்கும், தமக்குச் சேவை செய்வதற்கும் எத்தனையோ சந்தர்ப்பங்களைப் பொறுமையோடு தந்தருளுகிறார். ஆனால், நாமோ அவற்றைப் பயன்படுத்துகிறோமில்லை.

இறைவன் பொறுமையாய் இருந்துவருகின்றார். அவருடைய பொறுமைக்கு அடிப்படையாயிருப்பது, அவரது பொறுமைக்கு அந்தரங்கமாயிருப்பது அன்பே. அன்பே இறைவன். அன்பே தெய்வம். "அன்பு என்பதும், தெய்வம் ஒன்பதும், ஒன்று என்பதும் உண்மை அல்லவோ?" என்று அந்தப் பாடகஇளைஞர்குழாம் இன்பகரமாக இசைக்கும் அந்த இன்னிசைக் கீதம் காற்றிலே மிதந்து இந்த வேளை நமது கருத்தை ஈர்த்துநிற்பது ஆச்சரியமன்று. பொறுமை என்பது தலையாய ஒரு புண்ணியம். இறைவன் தம்மைப் போல, தம்முடைய சாயலாக நம்மைச் சிருட்டித்திருப்பதாலே நமது வாழ்க்கையில் நாமும் தம்மைப்போலப் பொறுமையாயிருக்க வேண்டுமென ஆசிப்பது நீதியாகும் அன்றோ! "பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்" என்பது வள்ளுவநாயனார் வாக்கு.

## பரமதிரித்துவத்...

( 8-ம்பக்கத் தொடர்ச்சி )

போலல்ல" என்றான் பரிசேயன். அதிகமாய் நேசிக்கிறவர்களுக்கு அதிக மன்னிப்பு அளிக்கும் தேவன் ஆயக்காரனின் விளக்கில் எண்ணெய் நிறைந்திருப்பதைக் கண்டார். அவரும அவனும் இரண்டறக் கலந்தனர். பரம திரித்துவத்திற்குச் சதா புகழ் உண்டாவதாக!

## கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை கார்த்திகை—1970,

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற, பாடசாலை மாணவர்களிடமிருந்து 16—9—70 க்கு முன்பாகவும் தனிப்பட்டபரீட்சார்த்திகளிடமிருந்து 31—8—70-க்குமுன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1970-1971 பரீட்சைக் குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு: தலைவர், திரு. எம் போராயிரவர் (4-ம் கட்டையடி), பலாலிறோட், உரும்பிராய்) காரியதரிசி, திரு. எம். திருநீலகண்டசிவம் (வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டை) உப காரியதரிசி, திரு எ கலியாணசுந்தரேசன் (தேவிமனை உடுவில் மேற்கு, சுன்னாகம்)

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

மு. திருநீலகண்டசிவம்,
கௌரவ காரியதரிசி.

## நாடகப்போட்டியில் முதலிடம்

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி இளவாலை கன்னியர் மட மாணவிகளால் நடிக்கப்பெற்ற "என் தலையில்" என்னும் நாடகம் இளவாலைப் பகுதியில் முதலிடம் பெற்றது. தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற போட்டியிலும் முதலிடம் பெற்றது. யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்ற ஐந்து நாடகங்களில் இளவாலை கன்னியர் மட நாடகம் முதலிடத்தைப் பெற்றதுமல்லாமல் மற்றும் யாழ் மாவட்டத்துக்கு வெளியேயுள்ள மாவட்டங்களுடன் போட்டியிட தகுதியும் பெற்றுள்ளது.

கூட்டுறவு அம்சத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகம் பரிசு பெற்றதில் வியப்பில்லை. நடிகர்கள் அனைவரும் தத்தம் பகுதியினைத் திறம்பட நடித்தமையும் வெற்றிக்கு ஒரு வழியாயிருந்தது. வெளிப்புறக் காட்சிகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் ஏழுபேரடங்கிய மத்தியஸ்தர் குழு இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தது. தந்தையாக நடித்த மனோன் தாயாக நடித்த விபியானு மற்றும் ஐயாத்துரை இராசதுரையாக நடித்தவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள். கருத்துள்ள பாடல்களும் பாராட்டப்பட வேண்டியனவாகும்.

— திராட்சையூரான்.

## காவலன் அபிமானி காலமானார்

இளவாலை புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த திரு. பேதுரு அருளப்பு கடந்த 22-7-70-ல் காலமானார் இவர் சிறுவயதிலிருந்தே காவலனை விரும்பிப் படித்த அபிமானிகளில் ஒருவராவர். இதுமட்டுமல்லாது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்ட கத்தோலிக்க நிகழ்ச்சிகளுக்கு வயலின் வாத்தியக்கருவி வாசித்தவருமாவர். அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## மடு திருசேத்திரத்தின் நடுநாயகமான பரிசுத்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நூறுபேர் வரை வாளுக்கிரையாகி உதிரஞ்சிந்திவேதசாட்சிகளானார்கள்.

இவ்விதம் மன்னாரில் வேத குழப்பங்கள் நடைபெறும் போது மாந்தையில் வசித்திருந்த கத்தோலிக்கர் போர்த்துக்கேயரின் உதவியைக் கொண்டு அங்கு ஒரு பெரிய கத்தோலிக்க ஆலயத்தைக் கட்டிமுடித்தனர். தற்சமயம் மருதமடுத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்த செபமாலை இராக்கினியின் அழகிய திருச்சுரூபம் அத்தேவாலயத்தில் பூச்சியமாக ஸ்தாபிக்கப்படலாயிற்று. அவ்வாறாகப் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து இலங்கையை ஆட்சிகொண்ட கல்வீனிய புரொட்டஸ்தாந்தர்கள் சங்கிலி மன்னனுக்குப்பின் கத்தோலிக்க சமயத்தை மீண்டும் அழிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் 1669ஆம் ஆண்டு மாந்தையைத் தாங்கள் கூடும் தலமாக்கவே மாந்தைக் கத்தோலிக்க மக்களான இருபது குடும்பத்தினர் 1670ஆம் ஆண்டு தாங்கள் மதித்தற்கரிய பொக்ஷமாகப் பேணிப் பாதுகாத்துவந்த செபமாலைமாதாவின் திருச்சுரூபத்தையும் தங்களுடன் எடுத்துக்கோண்டு அங்கிருந்து வெளிகொண்டு பலநாள் கானகமத்தியில் அலைந்தபின் கடைசியாக ஒரு சிறு கிராமத்தைக் கண்டு அதிலே குடியேறினார்கள். அந்தக் கிராமமே இன்று மருதமடுவாகக் காட்சியளிக்கின்றது. அதில் கோவில்கொண்டெழுந்தருளியிருப்பதாலேயே மாதாவும் மருதமடுச் செபமாலைமாதாவென்று அழைக்கப்பெறுகின்றார்.

உலாந்தாக்காரர் நடாத்திய வேதகலாபனையின்போது தம்முடைய தாசர்களுடன் மருதமடுத் திருப்பதிக்கெழுந்தருளியதுமுதல் அத் திருசேத்திரத்திலேயே அவர் நிரந்தரமாக எழுந்தருளியிருந்து காலந்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களைத் தம்பால் ஈர்த்துக் கணக்கற்ற அனுக்கிரகங்களைப் புரிந்து வருகிறார். ஓ! பரம ஆண்டவளே! அக்காலத்திலே உலாந்தக்காரரது வேதகலாபனையின்போது தமது பக்தர்களுடன் மடுப்பதிக்கெழுந்தருளியதுமுதல் இதுவரை தாம் செய்துள்ள அற்புதங்களுக்கு ஓர் அளவுண்டாமோ! இகபர நன்மைகள் இம்மட்டென்று சொல்லுந்தரமாமோ! பெற்ற தாயினும் மிக்க பேரன்புள்ள தாயே! பூரண சந்திரோதயம்போன்ற தமது திருப்புன்னகையையும், கருணைமழை பொழிகின்ற தமது திருவிழிகளையும், சாந்தம் ததும்புகின்ற தமது திருமுகமண்டலத்தையும் கண்ணுற்றபின்னரும் தம்மிலே அன்பு பாராட்டவும், தமது அடைக்கலத்தை நாடவும் தமது திருப்பாதாரவிந்தத்தைத் தொடவும் மனங்கொள்ளாதிருக்கும் மாந்தருமுண்டேயாமோ?

## நினைப்போம்

ம. தாயிசம்மா செல்வராணி

மறைவு: 15—8—68

இறையன்பில் வாழ்ந்தாள்—வளர்ந்தாள்—மறைந்தாள். அதே அன்பில் வாழ வைத்தாள்—வளர வைத்தாள்—வளம் பெறவைத்தாள்! அவளது ஆன்மா சாந்தியடைக.

✠

திரு சந்தியோ அந்தோனிப்பிள்ளை
அவர்கள் மறைவின்

## நாலாம் வருட நினைவு

பிறப்பு: 26-12-1908 இறப்பு: 15-8-1966

"சீவியத்தில் அவர் எம்மை நேசித்தார்,
மறைவில் என்றும் நினைவு கூருகிறோம்."

சருவேசுரா, இரக்கம் புரிகிறதும் பொறுத்தல் அளிக்கிறதும் எப்பொழுதும் உமது திருவுளத்தின் இயல்பாமே. ஆதலால இவ்வுலகத்தினின்று அழைக்கத் தேவரீர் திருவுளமான இவருடைய ஆத்துமத்தைச் சத்துரு வசம் அளிக்காமலும், கடைசி பரியந்தம் அதைக் கைவிடாமலும் இருக்கத் தேவரீரைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறுவோர்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.
42|5 மவுன் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

## பாட்டியின் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்திலேதான் நடந்தது. அவள் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாயிருக்கலாம் என்பதற்கே எதுவித ஆதாரமுமில்லை. அவளுக்குத் தானும் யோசவாஸ் தான் ஆரென்பதை அறிவிக்கவில்லையென்பது பின் நடைபெற்றவற்றிலிருந்து பிரஸ்தாபமாகிறது.

**பரிமளம்:** மனிதரைப் போட்டு சிப்பிலியாட்டத் தேவன் செய்யும் திருவிளையாடலைப் பாருங்களேன். எதிர்பாராத விதமாக எத்தனை சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதன்மேல், எத்தனைபேர் அதனால் நன்மை தின்மை அடைகின்றனர். தியாகமும் தருமமும் தேவனுக்கு விருப்பம் என்று காட்டத்தானே இப்படிச் செய்கிறார்.

**பாட்டி:** மாற்றமெதையும் நாம் கடவுளில் ஏற்ற முடியாது. எனவே, விளையாட்டுப்பேச்சு கடவுளுக்கு ஒவ்வாது. மாறும் நாங்கள் மாறாத அவனை அறிந்து அவன் முறையிலே மாற வேண்டும். அவனை அண்டி ஆசிப்பவனுக்கு எல்லாம் நன்மை. அவனைப் பிரியும் பேதைகளுக்கு எல்லாம் தின்மை. தியாகமுந் தருமமும் தெய்வீக குணங்கள். அவற்றையல்லவா நமது நாளாந்த வாழ்க்கையிலே சிறுவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்க வேண்டும். இதை வீட்டிலே மட்டுமல்ல விளையாட்டிலும் அனுசரிக்கலாமே!

**அருள்:** அப்படியே செய்கிறோம் பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**ஆவணி — 1970**

| | | | |
|---|---|---|---|
| 16 | ஞாயிறு | வருடத்தின் 20-ம் ஞாயிறு | [ப] |
| 17 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 18 | செவ்வாய் | ,, | [ப] |
| 19 | புதன் | ,, | [ப] |
| 20 | வியாழன் | புனித பேர்ணுட் | [வெ] |
| 21 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 22 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# சமயவாழ்வில் யாத்திரைகள்

மருதமடுத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்நாட்களில் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர் அங்கு குழுமியிருப்பார்கள். இன்னும் சென்று கொண்டுமிருக்கின்றனர். மருதமடு இலங்கைக் கத்தோலிக்கரின் பிரதான யாத்திரைஸ்தலமாக விளங்குகின்றது. மடுவுக்கு மட்டுமல்ல இன்னும் எத்தனையோ யாத்திரைஸ்தலங்களுக்கு வருடாவருடம் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர் சென்றுவருகின்றனர். யாத்திரைகள் கத்தோலிக்கர் சமயவாழ்வில் ஓர் அம்சமாக அமைந்துவிட்டது.

யாத்திரைகள் எவ்விதம் ஆரம்பித்தனவோ அறியோம். பழையஏற்பாட்டில் யூதமக்கள் தமது தேவாலயத்துக்கு யாத்திரையாகப் போகவேண்டிய அவசியம் இருந்தது. ஆனுல் கிறிஸ்தவருக்கு அப்படிப்பட்ட அவசியமொன்றும் இருக்கவில்லை. ஆயினும் வெகு விரைவிலேயே இவ்வழக்கம் கிறிஸ்துவரிடையில் பரவி வளர்ந்து வந்திருக்கவேண்டும். முக்கியமாகக் கீழ் நாடுகளில் மக்கள் யாத்திரைகளை மேற்கொள்வதில் விருப்புடையவராயிருக்கின்றனர். இந்துக்களும், பௌத்தரும், முஸ்லிம்களும் தல யாத்திரைகளை தம் சமயவாழ்வில் ஒரு பிரதான அம்சமாக் கருதும் பண்பாட்டைப் பின்பற்றியே கிறிஸ்தவரும் இதைமேற்கொள்ளத் தொடங்கியிருக்கலாம்.

அது எப்படியிருப்பினும், இன்று திருச்சபை தன்னைப் புதுப்பித்துவரும்போது. ஆதிநிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது, யாத்திரைகளை எவ்வாறு கணிக்கவேண்டும? எமது நாட்டின் பண்பாட்டோடு அவை ஒத்துவருகின்றன; ஆனுல் அவை கிறிஸ்தவவாழ்வுக்கு அவசியமான ஒரு பக்திமுயற்சியா?

யாத்திரைசெய்யும் வழக்கம் ஆரம்பமானபோது அது செபம், தவம் என்பவற்றின் அடிப்படையாகவே தோன்றியிருக்கும். அந்த நோக்கம் இன்றும் மாருதிருந்தால் திருவழிபாட்டில் அதற்கு ஒரு விசேஷித்த இடமுண்டு. யாத்திரை செய்வோர் அதைத் தம் சமயவாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக, கூடிய அளவு ஒரு தவ முயற்சியாகக் கணித்தால் அது அவர்களுக்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் பல ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தரக்கூடிய சாதனமாக அமையும்.

ஆனுல் சிலவேளைகளில் நடப்பதென்ன? அநேகருக்கு யாத்திரைதான் சமயவாழ்வின் ஆரம்பமும் முடிவுமாக இருக்கின்றது. வருடாந்தம் ஒரு யாத்திரையாவது இல்லாவிட்டால் அவர்களது சமய வாழ்வு நிறைவுபெறுவதில்லை. அயலவர்மட்டிலுள்ள கடமைகளை மறந்தாலும், நீதியையும் பிறரன்பையும் மறந்தாலும், தேவதிரவிய அனுமானங்களையும ஞாயிறு கடனையும் மறந்தாலும் யாத்திரையில் மாத்திரம் தவறமாட்டார்கள். இத்தகைய யாத்திரை எவ்வித நலனையும் விளைக்காது என்பது சொல்லாமலே விளங்கும். யாத்திரை ஓர் உல்லாசப் பிரயாணம்அன்று. இறைவனுக்கு மகிமைவருவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு புனித செயல். திருவழிபாட்டில் யாத்திரைகளுக்கு ஓர் இடமுணடு, ஒரு நோககமுணடு. தனி மனிதரும் குடும்பங்களும் அநேக ஆசீர்வாதங்களையும், தேவ அருளையும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் யாத்திரைஸ்தலங்கள் பலர் மனந்திரும்பவும் காரணமாக இருக்கின்றன. வேடிக்கைக்காக வந்தவரும் பணிந்து வணங்கிச் செல்லக் காணகிறோம். இங்ஙனம் ஒருசிலர் மனந்திரும்புவதற்கு அநேகரின பக்திமயமான யாத்திரைதான் காரணமாகும். எந்த யாத்திரையும் இறைவனுக்கும் தேவதாயாருக்கும் புகழை உண்டாக்குவதாகவும், பிறருக்கு நன் முன்மாதிரியானதாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

# பரமதிரித்துவத்தில் சீவியம்

நம் ஆண்டவராகிய யேசுக் கிறீஸ்துவால் உருவாக்கப்பட்ட திருச்சபையானது தனது சகல அருட்செல்வங்களையும் அளிக்கும்போது "பிதா, சுதன், தூயஆவி" என்னும் உன்னத மூன்று பேர்களாலும் அவைகளைக் கொடுக்கிறது. இதை நாம் "அவரிலும், அவராலும், அவரோடும்" என்றும் அழைக்கிறோம். "அவரிலும் நித்திய பிதாவையும், "அவராலும்" அவரின் ஏகசுதனையும், "அவரோடும்" தூயஆவியையும் குறிக்கிறது. இதைநாம் "கடவுளின் அன்பும் நம்ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின அருளும், பரிசுத்த ஆவியின் நட்புறவும்" என்றும் கூறுகிறோம். இப்பரம திரித்துவத்தில் சீவிப்பதே மனிதனைக் கிறீஸ்தவனுக்குகிறது.சற்றுச் சிந்திப்போம். ஒருகததியிருக்கிறது. அது எப்போது தன் மதிப்பைப் பெறுகிறது? ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் ஒரு வியாதிக்காரனுக்குப் பூரண ஆரோக்கியமளிக்கும் சிகிச்சை நிபுணரின் இடம்தான். ஆனுல் அதேகத்தி ஒரு கொலைக்காரனிடம் சேருமானுல் அக்கத்தியும் அதை உபயோகிப்பவனும் இருந்திராவிட்டால் உத்தமமாயிருக்குமென்றே கூறுகிறோம். ஏனெனில், அவைகள் விரும்பத்தக்கனவாயில்லை. நன்மதிப்பில்லை. எனவே சரியான தேவையில் நன்மையளிக்கும் பிரயோசனமே எப்பொருளும் மனிதனுக்குத் தேவையையும் மதிப்பையும் அளிக்கின்றது. இம் மதிப்பையும் தேவையையும் யார் நிர்ணயிக்கலாம்? எல்லோரின் மதிப்பையும் சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லாச் சமூகங்களையும் ஓர் உத்தமர் ஏற்றுக்கொள்ள முடியாது. உத்தமம் நிறைந்த சமூகத்தின் மதிப்பே எவராலும் விரும்பத்தக்கது. மனிதனுல் உருவாக்கப்பட்ட சமூகம் மனிதனளவு, ஏனெனில் மனிதன் பலவீனன். என்றும் தவறக்கூடியவன். எனவே தகுந்தமுறையில் ஓர் உத்தம சமூகத்தை உருவாக்க என்றும் தவருத தேவன் மனிதனுனர். அவர் உருவாக்கும் இறைமக்களின் மதிப்புக்கள் யாவும் நித்தியமானவை. ஏனெனில் இறைமக்கள் "அவரிலும், அவராலும, அவரோடும்" உருவாக்கப்பட்டவர்கள். உருவாக்கப் படுகிறார்கள்.

### அன்பின் அரவணைப்பில் அகமகிழ்ச்சி அடைவோம் !

அன்பே தெய்வம். அவரின் தன்மையும் வல்லபமும் அன்புதான். இவ்வன்பைச் சிநேகம் என்றும், எல்லோரையும் தம்முடன் இணைக்கும் நன்மைத்தனம் என்றும் கூறுகிறோம். யேசுவின்பூரண அன்பின் சீஷனுன புனித அருளப்பர் கூறுவதைச் சிந்திப்போம். "நாம் ஒருவர் ஒருவரைச் சிநேகிப்போமாக. ஏனெனில் சிநேகம் சருவேசுரனுல் உண்டாயிருக்கிறது. ஆகையால் சிரோகமுள்ளவன் எவனும் சருவேசுரனுல் பிறந்து, சருவேசுரனை அறிந்திருக்கிறுன். சிநேகம் இல்லாதவன் சருவேசுரனை அறியான். ஏனெனில் சருவேசுரன் சிநேகமாயிருக்கிறுர், தம்முடைய ஏககுமாரனுல் நாம் சீவிக்கும்படிக்குச் சருவேசுரன் அவரை இவ்வுலகத்தில் அனுப்புவதினுலே சருவேசுரன் நபதுபேரில் வைத்த சிநேகம் வெளிப்பட்டது.

நாம் சருவேசுரனைச் சிநேகித்ததினுல் அல்லவே, அவரே முந்திச் சிநேகித்து அவர்

பி. ஜே. அமிர்தநாயகம்

நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரப் பலியாகத் தமது குமாரனை அனுப்பினதினுலே அவருடைய அன்பு இன்னதென்று விளங்குகின்றது. சருவேசுரன் இத்தன்மையாய்ச் சிநேகித்திருக்கையில் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம். சருவேசுரனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரை ஒருவர் சிநேகித்தால் சருவேசுரன் நம்முள் நிலைத்திருப்பார். அவருடைய பரமஅன்பும் நம்மில் உத்தமமாய் இருக்கின்றது.

### அவர் கைகளை விரித்துப் பாடுபட்டார்

நித்திய பரமபிதா தனக்குப் புனிதமக்களைப் பெறச் சித்தமானுர். தனது நித்திய பரமானந்தத்திற்குப் பிள்ளைகளை உருவாக்க விரும்பினுர். இவர்களே அவரின் ஏககுமாரனின் இரத்தத்தின் உத்தம கனிகள். எனவேஇவர் தனது கைகளை விரித்துப் பாடுபட்டார். எப்படிச் சககிறீஸ்தவர்களில் பரமதிரித்துவத்திற்கும் சகல மனிதருக்கும் அன்பு பிறவாது இருக்கக்கூடும்? மனிதனுய்ப் பிறந்த எவனுக்கும் தாய்மையென்னும் இலட்சணம் புலப்படாது இருக்கக் கூடுமா? இது இப்படியானுல் சிலுவையில் மரித்த யேசுவைச் சிந்திக்கும் எவனும் தான் தேவஅன்பால் அவதரித்து அதேஅன்பால் சீவிப்பதை நன்கு உணர்ந்து பரமதிரித்துவத்திற்குச் சதா நன்றியாய் இருப்பான். உலகமும் உலக சிற்றின்பமும் மனித சமூகத்தை அலங்கோலப் படுத்துகிறது. ஆனுல் தேவனில் தேவன் அளிக்கும் பேரின்பமோ நித்திய அமைதியையும் உத்தம தனத்தையும் கொடுக்கிறது. கிறிஸ்தவனின் சீவியம் நித்திய அன்பரில் விசுவாசச் சீவியமும், அதே அன்பரில் நம்பிக்கைச் சீவியமும், அதே அன்பரால்வரும் பரமானந்தத்தை எதிர்பார்க்கும் சீவியமும். இவ்வாறு சருவேசுரனுல் உருவாக்கப்படும் எல்லோரையும் நபது சகோதரராய்ப் பாவிப்பதில் என்ன கசப்பு? பிறர்சிநேகம் தேவசிநேகத்தின் பிரதிபலித்தல். எனவே அன்பின் அப்போஸ்தலர் கூறுகிறுர்: "சருவேசுரனைச் சிநேகிக்கிறேன் என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன்பொய்யன். ஏனெனில், தன் கண்ணுல் காண்கிற சகோதரனைச் சிநேகியாதவன் தான் காணுத சருவேசுரனை எப்படிச் சிநேகிக்கக் கூடும்? சருவேசுரனைச் சிநேகிக்கிறவன் தன் சகோதரனையும் சிநேகிக்கக்கடவான்" என்கிற இந்தக் கற்பனை சருவேசுரனிடத்திருந்து நாம பெற்றிருக்கிறோம்.

### மணவாளன் ஏமாறவில்லை ஆனுல் கன்னியின் விளக்கில் எண்ணெய் இல்லை

எங்கும் நிறைந்திருக்கும் தேவன் அங்குமிருந்தார். அங்கு விசேஷமாய் இருந்தார். போன ஊதாரிப்பிள்ளை திரும்பிவர ஆவலோடு பார்த்திருந்தவர் அவரே! இழந்து போன ஒருசெம்மறி எப்போ வருமென விடாயாயிருந்தவரும் அவரே!! ஏனெனில், அது உன்னதமானவரின் தேவாலயம். இருவர் தனது நாமத்தினுல் கூடும்பொழுது அவர்கள் மத்தியில் இருப்பதாக வாக்குப்பண்ணின தேவன் அவரே. அவர் சத்திய சொரூபி. ஒருபொழுதும் ஏமாற்றமாட்டார். ஏமாற்றப் படவும்மாட்டார். ஆம், இருவர்கள் அங்கு இருந்தனர். ஒருவர் தேவனின் நாமத்தினுலேயே அங்கு இருந்தார். மற்றவர் அப்படியல்ல. அவர்கள்தான் ஆயக்காரனும் பரிசேயனும். ஆயக்காரனின் அப்பா பிதாவே! என்றஅபய ஒலி தூயஅன்பால் எழுந்தது. அவரின்விளக்கில் எண்ணெய் நிறைந்து இருந்தது. மற்றவர் அப்படியல்ல. ஆயக்காரனின் தாழ்மையில் வாழ்வு நிறைந்தது. மற்றவரில்அப்படியல்ல. மணவாளன் கதவைப் பூட்டிக் கொண்டார். மணம் முடிந்தது. தனது விளக்கில் அன்பென்னும் எண்ணெய் இல்லாததினுல் பரிசேயனின் விளக்கின்சுடர் அணைந்தது. வாழ்வற்றவனுய்த் தாழ்ந்தான் அன்பில்லாத பரிசேயன். ஏனெனில் "அப்பா" என்றபயமிடும் அப்பாவை இழந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்து, "நான் அவனைப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆண்டு ஆவணி மீ 15ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் : 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org